பக்கங்கள்-16 மார்கழி,06.2015 விலை-30.00




நடுநிலை இதழ்
# தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

தினப்புயலில்
சிறப்பு விளம்பரம்
விசேட விலைக்
கழிவுடன்
உங்கள்
விளம்பரங்களை
பிரசுரிக்க...
0778195947,
0776473692

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -149



## இனப்படுகொலையை மூடிமறைக்க த.தே.கூட்டமைப்பை பகடைக்காயாகப் பயன்படுத்தும் மைத்திரி அரசு

## பயங்கரவாதத் தடைச்சட்டமும், தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையும்

## இன அழிப்பு தொடர்பில் முதலமைச்சருக்கு உரிய நேரத்தில் தெரியப்படுத்தினோம் - அனந்தி




-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலையை மூடிமறைக்க த.தே.கூட்டமைப்பை பகடைக்காயாகப் பயன்படுத்தும் மைத்திரி அரசு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்த்ததன் பின்னர் மைத்திரியின் அரசானது தனது ஆட்சிப்பலத்தினை தக்கவைத்துக்கொள்ளும்நோக்கில்கிராம மட்டத்திலிருந்து நகரப்புறம் வரை தனது அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளை காய்நகர்த்திவருகின்றது. மைத்திரி-ரணில் இணைந்து நடாத்திவரும் நல்லாட்சி எதனை அடிப்படையாகக்கொண்டு நகர்த்தப்படுகின்றது எனப்பார்க்கும் பொழுது. தமிழினத்திற்கெதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலையினை மூடிமறைப்பதற்காகவேயாகும். அந்த அடிப்படையின்கீழ் பார்க்கின்றபொழுது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற ஒவ்வொரு தலைவர்களும் அரசினால் மூளைச்சலவை செய்யப்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரசாங்கத்தினது இராஜதந்திர முன்னகர்வுகளில் ஒன்றே எதிர்க்கட்சிப் பதவியினை தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு வழங்கியமையாகும். தமிழ் மக்களுடைய விடுதலையினைப் பொறுத்தவரை எதிர்க்கட்சிப் பதவி என்பது முக்கியமானவொன்றல்ல. எமது இனவிடுதலைக்கான தீர்வே முக்கியமானதாகும். 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2009வரை தமிழினத்திற்கெதிராக இனப்படுகொலைகள் இடம் பெற்றிருக்கின்றது. 2009இல் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டதாக மன்னார் மறை மாவட்ட ஆயர் அருட்திரு.இராயப்பு ஜோசப் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அதிலும் குறிப்பாக 1990-2009 வரை இலங்கையில் இரத்த ஆறு ஓடியது எனலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் மேலோங்கி செயற்பட முடியாமல் இருந்தது. அதனுடைய காரணம் என்னவெனில் அக்கட்சிகள் அரசாங்கத்திற்கு ஆதரவான செயற்பாடுகளிலேயே அன்று ஈடுபட்டன. அதனாலேயே தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய ஆயுதக்கட்சிகளும் இறுதியில் இராணுவத்தின் ஒட்டுக்குழுக்களாக செயற்பட ஆரம்பித்தன. அதன் விளைவாக தமிழினத்தின் விடுதலைக்காக தமிழீழ விடுதலைப்புலிகளே இறுதி வரை போராடவேண்டிய சூழல் உருவானது. இது போராட்டத்தினது வரலாறு. இன்று தமிழரசுக்கட்சி தான்தோன்றித்தனமானசெயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாக குற்றஞ்சாட்டப் படுகிறது. இக்குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் யார் எனப் பார்க்கின்றபொழுது அது தற்போதைய அரசின் சார்புடையவர்களே. வடக்கில் விக்னேஸ்வரனின் தலைமையில் ஒரு ஆட்சியும், தென்பகுதியில் மைத்திரி தலைமையிலான த.தே.கூட்டமைப்புடன் இணைந்த ஒரு ஆட்சி என நடைபெறுகின்றது. இதனிடையில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் வடமாகாணசபைக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளது. இவ்வாறான கருத்துக்களை முன்னெடுப்பதற்கு அடிகோலியதும் இந்த மைத்திரியின் அரசே.

மைத்திரியின் அரசானது அமெரிக்காவினது நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே தனது செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றது எனலாம். மஹிந்த ராஜபக்ஷ இருந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் கூட தற்போதைய அரசினால் முன்னெடுக்கப்படவில்லை. வீதிகள். பாலங்கள் புனரமைப்புக்கள் மற்றும் கட்டுமானங்கள் என்பனவற்றை துரித கதியில் முன்னெடுத்துவந்தது மஹிந்த அரசு. அப்போது 11000போராளிகள் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு விடுதலைசெய்யப்பட்டனர். ஆனால் மைத்திரியின் அரசில் நூற்றுக்குமேற்பட்ட போராளிகளை விடுதலை செய்வது கடினமாகவிருக்கின்றது. இது ஒரு வேடிக்கைக்குரிய விடயம்தான். இவ்வரசாங்கம் தமிழ் மக்களிடையே மீண்டும் ஒரு பிளவினை ஏற்படுத்தி தான் எண்ணிய அரசாட்சியினைக்கொண்டு வருவதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும், வடமாகாணசபைக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தி அதில் குளிர்காய்ந்து கொண்டு. கருணா-பிரபா பிளவினை ஏற்படுத்தியதைப்போன்று சம்பந்தன்-விக்னேஸ்வரனுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்த அரசு முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் அவர் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கூறியமையானது கட்சிக்குள் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ளும் நோக்கில் அல்ல[illegible] அவ்வாறு பகிரங்கப்படுத்துவத[illegible] காரணம் பிரச்சினையைத் தூ[illegible]பாகும். கட்சி விவகாரங்க[illegible]க்குள்ளேயே தீர்த்துக்கொள்ள[illegible] சட்டம் பற்றி நன்கு அறி[illegible]மந்திரன் அவர்கள் இவைபற்[illegible] அறியாதவரல்ல. இதற்கிடையில் ஏகமனதாக தமிழினத்திற்கெதிராக இனப் படுகொலைதான் நடந்தது என வடமாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் இவ்வாறு ஒரு முறுகல் நிலையை அரசு திட்டமிட்டே உருவாக்கியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் ஐ.தே.கவினது நெருங்கிய நண்பர் என்பது அனைவரும் அறிந்த உண்மை. தென்னிலங்கையில் வசித்துவந்த அவர் திடீரென ரணில் விக்கிரமசிங்கவினது செல்வாக்குடன் யாழ் மாவட்ட வேட்பாளராக இம்முறை களமிறக்கப்பட்டார். ஏற்கனவே தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இணைந்து தேசியப்பட்டியலின் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட அவர் அக்காலகட்டத்தில் மிகத்தைரியமாக எந்தவொரு அறிக்கைகளையோ அல்லது வடமாகாணத்திற்கெதிரான அல்லது அமைச்சர்களுக்கெதிராக கருத்துக்களைத் தெரிவித்த வரலாறுகள் இல்லை. இவ்வளவு தைரியத்தையும் அவருக்கு வழங்கியது அரசு தான். சுமந்திரன் அவர்களுக்கு தேர்தல் பிரச்சாரத்திற்காக பணம் ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தபோதும் உறுதிப் படுத்தப்படவில்லை.

சுமந்திரன் அவர்களின் செயற் பாடுகளைப்போலவே சந்திரிக்காவின் ஆட்சியில் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களும் செயற்பட்டிருந்தார். இதனாலேயே விடுதலைப்புலிகள் இவரை இலக்குவைத்துக் கொலைசெய்தனர். சர்வதேசமட்டத்தில் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியதே அவர் செய்த பிரதான விடயம். அதனது விளைவுதான் இன்றுவரையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இலங்கையில் இருந்து நீக்குவதற்கு மிகக்கடினமாக இருக்கின்றது. காலத்திற்குக்காலம் அரசாங்கம் தமக்கேற்ற வகையில் தமிழ் அரசியல் தலைவர்களைப் பயன்படுத்தி வந்தது. ஒரு கட்டத்தில்ரெலோ,புளொட்,ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழர் விடுதலைக்கூட்டணி ஆகிய நான்கும் இணைந்து த.தே.கூட்டமைப்பை பதிவுசெய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப திட்டமிடப்பட்டு குழப்பம் விளைவிக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் இருக்கின்றன. இவ்விடயத்தில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் முனைப்புகாட்டியபோதும் ஆரம்பத்தில் ஆம் என பதிலளித்த ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இரு நாட்கள் காத்திருங்கள் பதில் வழங்குகிறேன் எனக்கூறியபோதும் அத்தோடு அந்தப்பேச்சுக்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. இதனால் இரு கட்சிகளும் ஏமாற்றமடைந்தன. கூட்டமைப்பைப் பதிவு செய்யுங்கள் என சுரேஸ் -பிரேமச்சந்திரன் அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்திக்கொண்டே வந்தார். ஆகவே தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் த.தே.கூட்டமைப்பை பதிவுசெய்து ஒற்றுமையினை ஏற்படுத்து வதற்கு விரும்பவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்திலும் தற்போதும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. த.தே.கூட்டமைப்பை பதிவு செய்வதனால் ஏற்படப்போகும் ஆபத்துக்கள் வலுவாகக் காணப்பட்டமையினால் அதனை தமிழரசுக்கட்சி தவிர்த்துக்கொண்டது. அது தமிழரசுக்கட்சியின் அரசியல் இராஜதந்திரத்தில் ஒன்று. அக்காலத்தில் த.தே.கூட்டமைப்பினரை பிளவுபடுத்துவதற்கு அரசாங்கம் முனைப்பு காட்டுகிறது என்றெல்லாம் கூறப்பட்டது. இதற்கு வடமாகாணசபையும் இணைந்து தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தது. ஆனால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கும், வடமாகாண சபைக்கும் இடையில் பிளவுகள் ஏற்பட்டுள்ள இந்நிலையில் அதனை தட்டிக்கேட்டு சீர்படுத்துவதற்கு யாரும் முன்வரவில்லை. தந்தை செல்வா, தேசியத்தலைவர் என்ற வரிசையில் தற்போது முதலமைச்சர் விக்னேஸ்வரனையே மக்கள் கடவுளாகப் பார்க்கின்றனர். அந்தளவிற்கு மக்கள் மத்தியில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் மீது வெறுப்பினை ஏற்படுத்தியது யார்? தமிழ் மக்களுக்கான தீர்வுகள் வருகின்றபோதெல்லாம் 03 தசாப்த போராட்ட வரலாற்றிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அமுல்படுத்தப்பட்டதா என்றால் இல்லை.

திம்பு முதல் டோக்கியோ வரையான பேச்சுவார்த்தைகள் மற்றும் உடன்படிக்கைகள் பயனற்ற. கிழித்தெறியப்பட்ட வரலாறுகளே தொடர்ந்தது. தமிழரசுக்கட்சியினுடைய உயர் மட்டக்குழுவில் இருப்பவர்கள் அனைவரும் இதனைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இவ்விடயம் தொடர்பாக உங்கள் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளதா? வடக்கு முதல்வர் ஒரு கருத்தினையும், சுமந்திரன் இன்னுமொரு கருத்தினையும் கூறுகின்றாரே? இதுபற்றி உங்களின் கருத்துக்கள் என்ன என வினவும்பொழுது, இதுபற்றி உரியவர்களிடம் தான் கேட்கவேண்டும் என்றும் தமது சுயலாப அரசியலைசெய்யும் நோக்கோடு தப்பிச்செல்கின்றார்கள். பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர் பதவியினை அடைக்கலநாதன் அவர்களுக்கு வழங்கியமையின் காரணம் என்னவெனில், அடுத்த பாராளுமன்ற தேர்தல் வரும் வரையில் இவரது வாயினை அடைப்பதற்காகவேயாகும். இவரிடம் நாணயம் இருக்கின்றதா? என்றால் இல்லை என்றே கூறவேண்டும். இதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தான் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக பகிரங்கமாகவே அறிவித்தார். பின்னர் எதுவும் நடைபெறவில்லை. ஆகவே [illegible] நிகழ்ச்சிநிரலுக்கேற்ப [illegible]ஆசனத்தில் அமர்த்திவிட்டால் ஏனைய தமிழ்க்கட்சிகளுடைய வாயினை அடைத்துவிடமுடியும் என்பது அவர்களது இராஜதந்திர நகர்வாகும். வெறுமனே பதவிகளுக்கு ஆசைப்பட்டு செயற்பட்டு வருகின்ற இவர்கள் மக்களது நலனில் அக்கறையுடன் எவ்வாறு செயற்படப்போகின்றார்கள் என்கின்ற கேள்வியும் எழுகின்றது. வடமாகாண சபையில் இருக்கக்கூடிய அமைச்சர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களையே முன்வைக்கின்றார்கள். நிதி கையாளுவது தொடர்பில் எழுந்த பிரச்சினை இன்று இனப்படுகொலை வரை சென்றிருக்கின்றது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இதற்கான முன்னெடுப்புக்களை ஏன் மேற் கொள்ளவில்லை என்கின்ற கேள்வி எழுப்பப்பட்டதன் பின்னரே வடமாகாண சபையினால் இனப்படுகொலை என்கின்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

த.தே.கூட்டமைப்பினூடாக அரசியலுக்குள் பிரவேசித்த புதுமுகங்கள் அரசியலில் அநுபவசாலிகளாக வருவதற்கு காலம் தேவை. இதற்கிடையில் அடுத்த பாராளுமன்றத் தேர்தல் வந்துவிடும். அடுத்த தேர்தல்களில் வெற்றிபெற்று ஆசனங்களைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார்களே தவிர, மக்களின் நலனில் அக்கறைகொள்ளமாட்டார்கள். அக்காலகட்டத்தில் தமிழ்த்தேசியம். சுயநிர்ணய உரிமை பற்றிப்பேசுவார்கள். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடுகள் வடமாகாணசபைக்கு எதிரான செயற்பாடுகளா? வடமாகாண சபையில் இருக்கக்கூடிய அமைச்சர்கள். உறுப்பினர்கள் பல்வேறு கட்சி சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். முதலமைச்சரை நீக்குவதாகவிருந்தாலும் சபையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும். அது எந்தளவில் சாத்தியம் என்பதற்கப்பால் அவர் தானாகவே அரசியலில் இருந்து விலகிச்செல்வதற்கேற்ற நடவடிக்கைகளை த.தே.கூட்டமைப்பிலிருக்கும் ஒரு சில அங்கத்தவர்களினூடாகவும் அரசாங்கம் மேற்கொள்கின்றது.

தமிழ்மக்களுடைய இனப்படுகொலை என்பதுபற்றிகவனத்திற்கெடுக்கவேண்டிய பொறுப்பு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிற்கு இருக்கின்றது. ஆனால் வெளிநாடுகளிலும், உள்ளூர்களிலும் இது தொடர்பாகப் பேசிக்கொள்கின்றோம் எனக்கூறிக்கொள்ளும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்மக்களுக்கான பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப்பெற தேசிய மட்டத்தில் இதுவரை ஏதாவது முயற்சிகளை மேற்கொண்டார்களா? எனப்பார்த்தால் அதுவும் இல்லை. சர்வதேச நாடுகள் எப்போதும் தமிழினத்தையும், சிங்கள இனத்தையும் வெவ்வேறாகப் பார்த்தது கிடையாது. அவ்வாறு பார்த்திருப்பார்களேயானால் இதுவரையில் இலங்கையில் இடம்பெற்ற படுகொலைகள், ஆட்கடத்தல்கள், விசவாயு பிரயோகம், கட்டாய கருத்தடை, போன்றவற்றிற்கு முடிவுகளை எடுத்திருக்கலாம். பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் நோக்கிலும் அவர்கள் செயற்படவில்லை.

11ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## வரவு செலவுத் திட்டமும், த.தே.கூட்டமைப்பின் ஆதரவும்

தற்போதைய அரசினைப் பொறுத்தவரையில் தமது அரசினைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளும் நிலைப்பாட்டையே மேற்கொண்டு வருகின்றது எனலாம். த.தே. கூட்டமைப்பினது பாராளுமன்ற உறுப்பினர்கள் வரவுசெலவுத்திட்டம் தொடர்பில் குறிப்பாக சம்பந்தன். மாவைசேனாதிராசா. சுமந்திரன். சிவஞானம் சிறிதரன். சரவணபவான். சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா. சாள்ஸ். செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் அரசிற்கு எதிராக தமது எதிர்ப்பினை பாராளுமன்றத்தில் தெரிவித்ததோடு. பாதுகாப்பு செலவீனங்களுக்கே அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும். ஏனைய அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைவானது. இதனால் தமிழ் மக்களுக்கு எந்தவிதப் பயனும் இல்லை என்ற நோக்கில் இவர்களது கருத்துக்கள் அமையப்பெற்றபோதிலும் இறுதியில். வரவுசெலவுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியிருப்பது ஒரு கேலித்தனமான செயற்பாடாகும்.

எனினும் சம்பந்தன். மாவை சேனாதிராசா. சுமந்திரன். செல்வம் அடைக்கலநாதன் போன்றோரின் கருத்துப்படி அரசாங்கத்திடமிருந்து பல சலுகைகளை பெறவேண்டியுள்ளது என்கின்ற காரணத்தினாலேயே நாம் ஆதரவினைத் தெரிவித்தோம் எனக் கூறியிருக்கின்றார்கள். 30 வருடகாலப்போராட்டத்திற்கான தீர்வுகளை அரசு ஓரிரு வருடங்களுக்குள் வழங்கும் எனக்கூறிவிடமுடியாது. ஆகவே தற்போதைய அரசிற்கும் காலக்கெடு அவசியம். அதனையே நாம் இப்பொழுது செயற்படுத்தியிருக்கின்றோம் எனத் த.தே.கூட்டமைப்பின் முக்கிய உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்துள்ள அதே நேரம். தற்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. எஞ்சியிருக்கும் நபர்களும் விடுதலை செய்யப்படவிருக்கின்றார்கள். இந்நிலையில் அரசிற்கு எதிராக நாம் வாக்களித்துவிட்டு எவ்வாறு மீண்டும் அவர்களிடம் எமக்கான உரிமைகளைத் தாருங்கள் எனக்கேட்பது. ஆகவேதான் அரசாங்கத்துடன் ஒத்துச்செயற்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொள்கையளவில் எமது கருத்துக்களில் மாற்றமில்லை. ஆனால் இந்த வரவுசெலவுத் திட்டத்தை எதிர்த்து ஈ.பி.ஆர்.எல்.எப் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. இக்கட்சியானது த.தே. கூட்டமைப்புடன் இணைந்த அங்கத்துவக் கட்சியாகும். இவர்கள் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பதென்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் உருவாகியுள்ள முறுகல்நிலையை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது. உள் முரண்பாடுகளைத் தீர்க்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளும் அதேநேரம் எதிர்க்கட்சிப்பதவியினை இழந்துவிடக்கூடிய வாய்ப்புக்களும் இருக்கின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பானது அனைத்து விடயங்களையும் சிந்தித்து பதில் வழங்கவேண்டிய நிலையில். தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய கட்டாயமும் இருக்கின்றது.

வழங்கிய வாக்குறுதிகளை தமிழ்த்தரப்பு நிறைவேற்றியிருக்கின்றதா? எனப்பார்த்தால் அது இல்லை என்றே கூறவேண்டும். தமிழர்களுக்கு ஏமாற்றங்கள் மாத்திரமே தொடர்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவிற்கு அதிகாரம் வழங்கியபோதும் தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வுகள் வழங்கப்படவில்லை. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடங்களைக் கடக்கவுள்ள நிலையில் உடனடியாகத் தமிழினத்திற்கான தீர்வுகளை அரசிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ஆகவே இவர்களுக்கும் கால அவகாசங்களை வழங்கி அதன்பின்னர் அவர்களின் நிலைப்பாடு என்னவென்பது பற்றி அறிந்துகொள்ள இயலும் என த.தே.கூட்டமைப்பினர் தெரிவிக்கின்றனர். எனினும் த.தே.கூட்டமைப்பு இந்த அரசிற்கு சோரம்போயுள்ளதாகவே ராஜதந்திரிகள் பலரின் கருத்துக்கள் அமையப்பெற்றுள்ளன.

**73** இதுவரை நேரத்தில் தரையிறங்கும் அணிகளுக்கான பாதுகாப்பில் ஈடுபட்ட தனுஷாவின் அணி கொம்பனி மேலாளர் தர்ஷாவுடன் தொண்டைமானாறு நீரேரியை நோக்கி மணல் வீதியூடாக நகரத்தொடங்கியது. நாகர்கோயில் பகுதியிலிருந்து பருத்தித்துறைசெல்லும் பழுதடைந்த தார் வீதியைக் கடந்து, ஆள் உயரப் புற்களை விலக்கியபடி நீருக்குள் கால் வைத்தனர். அடுத்து தரையிறங்கிய கீர்த்தியின் பிளாட்டூன், தரையிறங்கிக் கொண்டிருக்கும் ஏனைய அணிகளின் பாதுகாப்புக்காகக் கொம்பனியின் கட்டளை அதிகாரி லக்சனாவுடன் செம்பியன்பற்றுப் பகுதியில் தயாராக நிற்க. மற்றைய அணிகள் தத்தமது திசைகளைநோக்கி நகரத்தொடங்கின. அது இருள் கலையாத நேரம். மக்களின் குடியிருப்புக்கள் எங்கே என்று தெரியாத நிலையில் எமக்கு வாய்ப்பான இடங்களிலே வேக வேகமாக நிலை அமைக்கும் பணிகள் நடந்துகொண்டிருந்தன. பொழுது புலர்ந்தால் சண்டை தொடங்கும் என்பது நிச்சயம். அதனால் அமைதியாகப் பணிகள் அரங்கேறின.

மெல்லிய குளிர் காற்று மேனியை வருட, மண்வெட்டி மண்ணில் ஆழமாக இறங்கியது. சிறிய வாளியும். கையில் நாலைந்து குவளைகளுமாக சிவப்பு உடையணிந்த ஒரு சிறிய உருவம் திடீரென அங்கே தோன்றியது. எல்லோர் விழிகளும் அங்கேயே . நிலைத்தன. பற்றைகளை விலக்கியபடி எம்மைநோக்கி வந்துகொண்டிருந்தது ஓர் அன்னை. எனினும் எங்கள் இராணுவ உணர்வு எச்சரிக்கை செய்தது. அப்பாலே உற்றுப் பார்த்தோம். எதையுமே காணவில்லை. புன்னகையுடன் வந்த அன்னை தேநீரைக் குவளைகளில் ஊற்றி எம்மிடம் நீட்டினார். வீட்டில் விடியற்காலை குளிருக்குள் படிப்பதற்காக எம்மை எழுப்பிவிட்ட பின்னர் சுடச் சுடத் தேநீரைத் தயாரித்துத்தரும் எங்கள் அம்மாவின் பரிவும் கனிவும் அவர் பார்வையில் இருந்தது. வீட்டிலே நன்றாகப் படிக்கவேண்டும் என்பதற்காக அம்மா தேநீரைத் தந்தார். இந்த அம்மா நன்றாகச் சண்டை பிடிக்கவேண்டும் என்பதற்காக இந்தத் தேநீரைத் தந்திருப்பாரா? எதுவாக இருந்தாலும் ஐதீகக் கதைகளில் வருகின்ற அமுதம்கூட அந்த அன்னையின் தேநீருக்கு ஈடாகாது என்பதுமட்டும் உண்மை. தேநீரை அருந்துகின்றபோது எல்லோர் விழிகளிலும் நீர் திரையிட்டது.


சாந்தகுமாரியின் கொம்பனி மாமுனைக் கடற்கரை தொடக்கம் நீரேரிக்கரைவரை நிலையெடுத்திருந்தது. நேரம் ஏழரையைத் தாண்டியிருக்கும். மக்கள் நடமாடத் தொடங்கிவிட்டனர். அவர்கள் தத்தமது வேலைகளுக்காகப் புறப்பட்ட வேளைதான் போராளிகள் அங்கு நிற்பதைப் புரிந்துகொண்டனர். வீதியால் விற்பனைக்குப் பாண் கொண்டுவந்த தந்தையொருவர் திகைத்துப்போனார்.

எப்ப பிள்ளையள் வந்தனீங்கள்? ஆச்சரியத்தோடும். அதிர்ச்சியோடும் தடுமாறிக்கொண்டு நின்ற ஐயாவிடம். "விடியத்தான் ஐயா வந்தனாங்கள். நீங்கள் அங்காலபோக ஏலாது. சண்டை தொடங்கப்போகுது. திரும்பிப் பாதுகாப்பான இடங்களுக்குப் போங்கோ" என்று சொல்ல. நீங்கள் வந்ததே காணும் பிள்ளைகள் என்ற எண்ணப் பார்வையுடன் பெட்டியோடு பாணை இறக்கி எம்மிடம் தந்துவிட்டுப் போய்விட்டார்.

அள்ளி அள்ளி வெளியில் எறிந்தாலும் மீளவும் பள்ளத்தைநோக்கி வழிந்து வீழுகின்ற மணலுடன் போட்டிபோட்டு அமைக்கப்பட்ட பதுங்குகுழிகளில் இருந்தவாறு பகை இருக்கும் திசைநோக்கிச் சுடுகலன்களுக்கு ஏற்றவாறு நிலைகளைச் சரிபார்த்துக்கொண்டு இருந்தோம். அவ்விடத்திலிருந்து 200மீ. தூரமளவில் இராணுவத்தினரது நடமாட்டம் தெரிந்தது. அது மாமுனை. அங்கே ஒரு தளம் அமைந்துள்ளதா. அல்லது அது காவல் உலா அணியா என்பதை உடனடியாக இனம் காணமுடியவில்லை. படையினர் எம்மைக்கண்டுவிட்டார்களோ என்னவோ திடீரெனத் துப்பாக்கிச் சூடுகள் எம்மைநோக்கி வந்தன. அவ்விடத்துக்கு நேரே பிரியங்காவின் 50 கலிபர் தாக்கிவிட்டு நின்றது. அதே நேரம் அங்கிருந்த இராணுவம் ஒரு தாக்குதல் நடவடிக்கைக்குத் தயாராகுவதுபோல் தெரியவே நிலைமை கட்டளைப் பீடத்துக்கு அறிவிக்கப்பட்டது. அது ஒரு சிறியதளம் எனவும். அதனைத் தாக்கிக் கைப்பற்றும் படியும் கட்டளை வந்ததை அடுத்து, சாந்தகுமாரியின் தலைமையின் கீழ் நின்ற மேஜர் செல்வியின் அணி கனரக ஆயுதங்களை இணைத்துத் தாக்குதல் நடத்தியபடி முன்னேறி உள்நுழைந்தது. பனங்கூடல்களும். ஈச்சம் பற்றைகளுமாய் இருந்த அந்தப்பகுதி. படையினருக்கு வாய்ப்பாக இருந்தது. எனினும் வேகமாக அணிகள் உள்ளே நுழைய எதிர்பாராதவகையில் திணறிப்போய் ஆயுதங்களையும் போட்டுவிட்டுச் சிலர் ஓட்டம் பிடிக்க, பலர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். குறிப்பிட்ட நேரத்திலேயே அத்தளம் வெற்றிகொள்ளப்பட்டதன் மூலம் பல கனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

செம்பியன்பற்றுப் பகுதியால் உள்ளே புகுந்த இராணுவத்துக்கும் லக்சனாவின் அணியினருக்குமிடையில் தாக்குதல் தொடர்ந்தது. இச்சிறிய பகுதிக்குள் நடந்த கடுமையான தாக்குதலில் பல இராணுவம் கொல்லப்பட்டதுடன். முதன் முதலில் எம்மவர் நால்வர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். பின் லக்சனாவுடன் நின்ற கீர்த்தியின் பிளாட்டூன் நீரேரியூடாக நகர்ந்து தனுஷாவின் அணியுடன் இணைந்துகொண்டது. சாந்தகுமாரியின் அணி மீள ஒழுங்கமைக்கப்பட்டு தாளையடிப் பகுதியை நோக்கிச் சிறிது தூரம் நகர்த்தப்பட்டதுடன் அடுத்தகட்டத் தாக்குதலுக்கான ஆயத்தங்களைச் செய்தது. "பொறு கிட்ட வரட்டுக்கும் குடுப்பம்" என்று சொல்லிவிட்டுக் குறிபார்த்துக்கொண்டிருந்தோம். இடைத்தூரம் 200மீ. ஆகக் குறுகியதும் கடற்கரையில் நின்ற மாதினியின் 50 கலிபர் உட்படத் துப்பாக்கிகள் ஒவ்வொன்றும் ஒலித்து அடங்கின. அதன் பிறகு எதையுமே காணவில்லை. பின்பு அப்பகுதியில் இராணுவம் வரமுயற்சிக்கவேயில்லை. தரையிறங்கிய அணிகள் தத்தமது நிலையில் நிற்க. பொழுது மாலையாகியது. வரட்சியைத் தாங்கக்கூடிய தாவரங்கள் கூடல் கூடலாகச் செறிந்திருக்க ஒற்றையடி மணற்பாதைகள் குறுக்கும், நெடுக்குமாகச் சென்றிருந்தன. இத்தகைய இடமொன்றினூடாகக் கப்டன் கலைக்குயிலின் அணிகள் 100மீ. இடைவெளியில் நிலையமைத்திருந்தன. அங்கே நின்ற செக்சன் கட்டளையதிகாரி கப்டன் யசோதினி தனது அணியினரின் நிலைகளைப் பார்வையிடுவதற்காக 40மி.மீ. எறிகணை செலுத்தியைத் தோளில் கொழுவியவாறு சென்றுகொண்டிருந்தார்.

# உலக வரலாற்றில் விடுதலைப் புலிகளின் மாலதி படையணி



செம்பியன்பற்றுப் பகுதிச் சண்டையில் சிதறிய படையினர் இருவர் நாகர்கோயிற்பகுதி நிலையருகில் உள்ள பற்றையொன்றினுள் ஒளிந்திருந்தனர். அந்நேரம் தூரத்தில் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. தனது நடைபேசியில் சத்தத்துக்குரிய காரணத்தைக்கேட்டவாறு மெதுவாக நடந்துகொண்டிருந்தார் யசோதினி. பற்றையினுள் பதுங்கிக்கிடந்த படைவீரர்களுக்குத் துணிவு வருவது பெண் பிள்ளையல்லவா? ஆயுதத்தைப் பறிக்க வேண்டியதுதான். பதுங்கிப் பதுங்கி வந்து அவரின் கையை எட்டிப் பிடித்தார் ஒரு படைவீரர். திடுக்கிட்டுத் திரும்பியவர் கண்டது படையினரை. தலைவர் எங்களை அனுப்பியது சாக அல்ல. சாதிக்க, கையிலிருந்த ஆயுதம் படைவீரரின் முகத்தைப் பதம் பார்த்தது. நிலை தடுமாறி வீழ்ந்தவர் மீண்டும் எழுந்திருக்க முதலே 40மி.மீ. எறிகணை சீறிச் சென்றது. காயமடைந்து வீழ்ந்தவர் மீண்டும் எழு[illegible]வயில்லை. இதைக்கண்ட பயத்தில் மற்றவர் பற்றைக்குள்ளே பதுங்கிக்கொண்டார். அவரையும் சுட்டுவிட்டுத் தொடர்ந்து நடந்தார்.

நாகர்கோயில். தள்ளாடிப் பகுதிகளைநோக்கியதாக அமைக்கப்பட்ட இரு தொகுதி காப்பு நிலைகளுக்கும் இடையில் அமைந்திருந்த கட்டளை மையத்திலிருந்து கேணல் விதுஷா தேவையான கட்டளைகளை அவ்வப்போது வழங்கிக்கொண்டிருந்தார். இதுவரை ஒரு சில தாக்குதல்களுக்கு முகம் கொடுத்திருந்தது மாலதி படையணி. கடலிலே மேலும் கீழும் விரைந்துகொண்டிருந்த சிறீலங்காக் கடற்படைப் படகுகள் கரையைநோக்கித் தாக்கியவாறு இருந்தன. இரு பக்கமிருந்தும் தாராளமாக எறிகணைகள் வந்து வீழ்ந்து வெடிக்க, அந்தப் பகுதியே பெரும் போர்க்களமாக மாறியிருந்தது. போதாக்குறைக்கு வானத்தில் கிபிர் விமானங்கள் வந்து தம் பணியைச் செய்யத் தவறவில்லை. இப்படியாக அன்றைய நாள் மேஜர் கோகிலா. கப்டன் சுடரினி. லெப்.அன்புவேங்கை. லெப்.அன்பரசி, 2ஆம் லெப்.சசி. லெப். உமா. கப்டன் அன்புவிழி/சுபா ஆகியோர் வீரச்சாவடைந்திருந்தனர்.

**தொடர்வான்...**

### தமிழீழ வரலாற்றில் தடம் பதித்தவர்கள்

| இல | பெயர் | சொந்தப்பெயர் | மாவட்டம் | வீரச்சாவு | சம்பவம் |
|---|---|---|---|---|---|
| 462. | வீ.வே.புகழரசி | கலைவாணி கிருஸ்ணர் | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 463. | வீ.வே.தகைநிலா | செல்வகுமாரி தங்கராஜா | வன்னி | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 464. | வீ.வே.வெற்றிமலர் | ஆனந்தி சின்னத்தம்பி | முல்லைத்தீவு | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 465. | வீ.வே.கலையமுது | பாழினி செல்லையா | வவுனியா | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 466. | வீ.வே.நிலைவாணி | வேனிஸ்ரெலா அந்துரோஸ்தவராசா | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 467. | வீ.வே.க[illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |
| 468. | வீ.வே.வை[illegible] | [illegible] | யாழ்ப்பாணம் | 1998.09.27 | கிளிநொச்சி ஓயாத அலைகள்-2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவனின் தற்கொலையும் வடபுலத்து அரசியல்வாதிகளின் குறுமதியும்

யாழ்ப்பாணம் கோப்பாயைச் சொந்த இடமாகவும், யாழ்/கொக்குவில் இந்துக்கல்லூரியைக் கல்வி கற்கும் பாடசாலையாகவுங்கொண்ட இராஜேஸ்வரன் செந்தூரன் என்னும் 18 வயதுள்ள மாணவன் நீண்ட காலமாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திக் கடிதமொன்றை எழுதிவைத்துவிட்டுத் தற்கொலைசெய்துகொண்டதாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவம் கோண்டாவில் உப்புமடம் புகையிரதக் கடவையில் இடம்பெற்றுள்ளதாகவும் செய்திகள் குவிந்துள்ளன.

தமிழ்நாட்டு அரசியலின் தீக்குளிப்பு மரணத்தையொத்த பாணியில் இந்நிகழ்வு இடம்பெற்றுமிருக்கின்றது. தமிழக அரசியலிலுஞ் சரி, சினிமாத்துறையிலுஞ் சரி இவ்வாறான நிகழ்வுகள் அடிக்கடி இடம்பெறும்போது அங்குள்ள அரசியல்வாதிகளும், சினிமாக்காரர்களும் இவ்வகையான மரணங்கள் தொடர்பில் தாம் ஆழ்ந்த மன வேதனையடைவதாக நாடகமாடிச் சம்பந்தப்பட்ட மரண நிகழ்வுகளில் தமது கட்சிக்கொடிகளோடும், சால்வைகளோடும் பங்குபற்றுவதோடு ஒலிபெருக்கிபொருத்தி உரமாகப் பேசிக் கட்சி வளர்த்தமை மட்டுமல்லாது தமது நீளப்பெருத்த வயிறுகளை மேலும் நீளமாக்கியும், அகலப் பருத்த நெஞ்சுகளை மேலும் அகலமாக்கியும் ஆத்ம திருப்தியடைந்தமையோடு தமது சுகபோக வாழ்க்கையைக் கச்சிதமாக நகர்த்திச்சென்றுமிருந்தார்கள். சென்றுகொண்டுமிருக்கின்றார்கள். தத்தமது கட்சிகளின் தொண்டர்களென அக்கட்சிகளின் தலைவர்களின்பால் விளிக்கப்படும் அப்பாவிகளின் பிரேதங்களின் மீது எகத்தாளமாக ஏறி நடைபயின்றும், அவர்களுடைய இரத்த வெள்ளத்திலே தமது நீச்சலுடை இராணிகளோடு நீந்தி விளையாடி பிரபுத்துவ கனவான் வாழ்க்கையை மேற்கொள்ளும் இருண்ட யுகமொன்று தமிழகத்தைப்போல யாழ்ப்பாணத்திலும் களைகட்ட ஆரம்பமாகிவிட்டதா? என ஐயுறவேண்டியுமுள்ளது.

தமிழ் அரசியல்கைதிகளை விடுதலை செய்யும்படி வலியுறுத்திச் சம்பந்தன் அவர்கள் தமது எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியைத் தூக்கி வீசுவதோடு தமது சகாக்களுடன் சாகும் வரையிலான உண்ணாவிரதமொன்றை மேற்கொண்டாலென்ன? என்னும் ஆதங்கமொன்று வடபுலத்து அரசியல்வானில் ஆழவேரூன்றியபோது பூரண மௌனம் காத்துத் தமது நாடாளுமன்ற நலனை மிகவும் வலுவான நிலையில் பாதுகாத்து நின்ற தமிழ்த்தேசியம் பேசும் ஐ.தே.கவின் நேசர்களும், அமெரிக்க தாசர்களும் கோப்பாய் மாணவனின் கோர மரணத்தில் தமது இந்தச் சாபக்கேடான அரசியலின் மயானத்தை நோக்கிய பயணத்தைத் தடுத்து நிறுத்தி உயிர்ப்பூட்டி உவகையூட்டக்கூடியவாறான தந்திரோபாயங்களோடு இயைந்த கருத்துக்களைக்கூறி உயிரோட்டம் குறைந்துகொண்டிருக்கின்ற தமது பித்தலாட்டம் நிறைந்த அரசியலுக்குக் குளுக்கோசும் ஏற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

கேவலம், பதினெட்டே அகவையான ஓர் அனுபவக் குறைவான மாணவனின் கோரமான முடிவையிட்டு மனம் மிக வெதும்பி இவ்வாறான நடவடிக்கையில் அவரையொத்த ஏனைய யாழ்ப்பாணத்துச் சிறார்களும் ஈடுபடாதவாறு தடுத்துநிறுத்தவேண்டிய வடபகுதி அரசியல்வாதிகள் தற்கொலை செய்த மாணவனின் உணர்வைத் தாம் பெரிதும் மதிப்பதாக விண்ணானம் பேசி மிகவும் கடைநிலைப்பட்ட இழிந்த பிறவிகளோடும், பாவஜென்மங்களாகவும் சிறிதளவேனும் மனக்கூச்சமோ வெட்கமோ இல்லாத ஈனத்தனத்தின் உச்சக்கட்டத்தைத் தொட்டவர்களாகத் தம்மை அடையாளப்படுத்தியுமுள்ளார்கள்.

தற்கொலைசெய்துகொண்ட மேற்படி மாணவனால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் கடிதத்தில் தமிழ் ஈழம் கிடைக்கவேண்டும். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாதவிடத்துத் தான் உயிர் வாழ்வதில் எவ்வித பயனுமில்லை. என்னும் இரு விடயங்கள் பிரதானமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இம்மாணவன் இயல்பாகவே இவ்வாறான என்ன ஊற்றின்பாற்பட்டுத் தண்டவாளத்தில் படுத்திருந்து புகையிரதத்தினால் நெரியுண்டு கோரமாகப் பலியானாரா? அல்லது எவராலும் தூண்டிவிடப்பட்டு இப்பரிதாபகரமான செயலை மேற்கொண்டாரா? என ஐயுறவும் வேண்டியுள்ளது. மேலும் இம் மாணவனின் உறவினர் எவராவது அல்லது வேண்டியவர் யாராவது சிறையிலிருந்து அதன் நிமித்தமாக அவர் இந்நடவடிக்கையை மேற்கொண்டாரா? எனவும் பரிசீலிக்கவேண்டியுள்ளது.

அத்தோடு ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் எதிர்பாராமல் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர்ப் பதவியை இம்மியளவும் இளகவிடாமல் இறுகப்பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் சம்பந்தன் அவர்கள் மாணவனின் தற்கொலையைப் பூதாகரமாக வெளிக்காட்டி 'தேசமே விழித்தெழ வேண்டும் அரசியல்கைதிகளை விடுதலை செய்யவேண்டும்' என்றவாறெல்லாம் கூப்பாடு போட்டமையும் அவருடைய அக்கூப்பாடானது கொழும்புப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவரது அபிநயங்களோடு இயைந்த நிழற்படங்களோடு பிரசுரிக்கப்பட்டும் இருக்கின்றது.



சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி.திருமதி.ஸ்ரீநிதி நந்தசேகரன்

தமிழ் அரசியல்கைதிகள் விவகாரத்தில் நெஞ்சுரத்தோடும், நேர்மைத்திறனோடும் வடபுலத்தில் வெகுஜன எழுச்சியை ஏற்படுத்துவதற்கு இயலாத ஏதிலியான சம்பந்தன் ஓர் அப்பாவி மாணவனின் கோரச்சாவில் மிகவும் கடைநிலைப்பட்ட இழிவான அரசியல் இலாபம் பெற முயற்சிக்கின்றார். அரசியல்கைதிகள் பிரச்சினையில் மைத்திரி-ரணில் அரசை ஆட்டங்காண வைப்பதற்கு முதுகெலும்பில்லாத முதுபெரும் அரசியல் தலைவர் ஒரு மாணவனின் அநியாய மரணத்தைச் சாட்டாகவைத்து பெரிதாகப் பீற்றிக்கொண்டிருக்கின்றார். இச்சம்பந்தன் என்னுங் கனவானும் அவரையொத்தவர்களும் இன்னும் நமது இளையோரை கருத்தில்லாத நெறியில் சென்று சாகடிப்பதற்கு உசுப்பேற்றுகின்றார்களா? எனவும் ஐயுறவும் வேண்டியுள்ளது.

மகசின் தமிழ்ச் சிறைக்கைதிகள் கூட மாணவனின் பரிதாபகரமான மரணத்தையிட்டு மிகவும் மன வேதனையடைந்து தமது விடுதலைக்காக இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தாம் விரும்பவில்லையெனவும் எனவே எமக்காக வடபுலத்தின் இளையோர் உணர்ச்சிவசப்பட்டுக் கோப்பாய் மாணவன் மேற்கொண்ட செயலையோ அல்லது அவ்வாறான நடவடிக்கைகளையோ மேற்கொள்ள வேண்டாமென அறிவுரை கூறும் நல்லுள்ளம் படைத்தவர்களாக இருக்கும்போது கேவலம் தமது நாடாளுமன்ற எதிர்க்கட்சி ஆசனத்தையும் ஏனைய ஆசனங்களையும் தக்க வைத்துக்கொண்டு கொழும்பில் சுகபோக வாழ்க்கையை மேற்கொள்வதோடு உலக வலமும் வந்துகொண்டிருக்கின்ற சம்பந்தன் போன்ற பெரியவர்களுக்கு மகசின் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தற்கொலை செய்த கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் தொடர்பிலான அனுதாபத்தோடு இயைந்த நல்லுள்ளத்தில் ஒருதுளி கூட இல்லையென்பது தெளிவாகின்றது. வெறும் அபிநயம் பிடித்துப் பதவிப் பசியாறுவதொன்றையே தமது தாரக மந்திரமாகக்கொண்டுள்ள இப்பாவஜென்மங்கள் கோரமான மரணத்தைத் தழுவிக்கொண்ட அப்பாவி மாணவனின் மரணந்தொடர்பில் வாழ்த்தி, வரவேற்றுப், பாராட்டி, மெச்சி ஒலிபெருக்கியில் முழங்கித் தமது தொந்தி வயிறுகளை மேலும் வளர்த்தெடுப்பதற்காக வடக்கின் இளையோரை அநியாயமாகச் சாகடித்து அவர்களை நம்பியிருக்கும் குடும்பத்தவர்களைப் பிச்சைப் பாத்திரம் ஏந்தவைக்கும் நிலை தொடர்பில் புழுக்களைவிடத் தம்மைக்கேவலமான நிலைக்குத் தாழ்த்திக்கொண்டிருக்கின்றார்கள். வடக்கு கிழக்கில் வதியும் தமிழ் மக்களின் வாக்குகளைச் சேகரிப்பதில் மட்டும் மிகவும் வெற்றிகரமாக வெகுஜன எழுச்சியையேற்படுத்தும் சம்பந்தன் தரப்பாருக்குத் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையையிட்டு வெகுஜன எழுச்சியொன்றை ஏற்படுத்த முடியாமல் போனமை மிகவும் துரதிட்டவசமானது. பதிலீடாக அவர்கள் தற்போது தற்கொலைசெய்துகொண்ட மாணவனின் சாவில் இலாபம் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றார்கள். செத்த பிணத்தின் மீதுஉள்ளதைஉருவும்தன்முனைப்புமிக்க கடைக்கோடி உணர்வைவிடக் கோண்டாவில் புகையிரதக்கடவையில் கோர மரணத்தைத் தழுவிக்கொண்ட செந்தூரன் என்னும் மாணவன் தொடர்பிலான பெரியவர் சம்பந்தன் அவர்களதும் அவருடைய சகாக்களதும் உணர்வு மிகவும் கீழ்த்தரமானவொன்று என்பது மிகையல்ல. இவர்களுடைய இவ்விழிநிலையைப் பொறுத்துக்கொள்ளமுடியாதமகசின்சிறையில்உள்ள தமிழ்க் கைதிகளே இந்நபர்களின் மாணவன் தொடர்பிலான கருத்துக்களையும் நடவடிக்கைகளையுமிட்டு அதிருப்தியையும் வெளியிட்டுமுள்ளார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி.திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரின் தற்கொலை செய்த மாணவன் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் பாராட்டக்கூடியவகையாக விளங்குவதோடு அன்னார் அவ்வாறான கருத்துக்களை வெளியிட்டமைக்காக, அரசியல் வண்டவாளங்களின் அபிப்பிராயங்களோடும், நடவடிக்கைகளோடும் ஒப்புநோக்கிச் சாவகச்சேரி நீதிபதிக்குச் சபாசுக்கு மேல் சபாஸ் போட்டுச் சிரம் தாழ்த்தி மரியாதையும் செய்யலாம்.

அன்னார் தற்கொலை செய்த மாணவன் தொடர்பில் மிகவும் பரிவுகொண்டு தொடர்ந்தும் அரசியல்வாதிகளின் விவேகத்துக்கு அப்பாற்பட்டதான வெற்றுக் கோஷங்களினாலும் உசுப்பேற்றித் தம்மை மேலும், மேலும் வளர்த்துக் தக்கவைத்துக்கொள்ளும் வெறுங் கோஷங்களினாலும் செந்தூரனைப்போன்று இன்னும் பலர் அநியாயமாகச் சாகடிக்கப்படும் அபாயம் உள்ளதென்பதையும் இடித்துரைத்துத் தமிழ் மக்களையும், இளையோரையும் மிகவும் துணிச்சலுடன் விழிப்படையவைத்துமுள்ளார். அவர் அத்தோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் தற்கொலை செய்துகொண்டவர் பாடசாலை மாணவன் என்பதனாற்போலும் சகல பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் இத்தகைய முடிவுகளுக்கு மாணவர் வராதவாறு தற்போதே அறிவுரை கூறித் தடுத்து நிறுத்தவேண்டுமெனவும் அதிபர்கள், ஆசிரியர்கள் முதலானோருக்கும் ஆலோசனை வழங்கியுமுள்ளார். இவ்விடயத்தையிட்டும் சாவகச்சேரி நீதிபதி.நந்தசேகரன் அவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர் மட்டுமல்ல வணக்கத்துக்குரியவராகவும் ஆகின்றார். இத்தோடு மட்டும் அவர் நிறுத்திவிடாமல் மேலும் முன்னேறிச் சென்று செந்தூரன் என்னும் தற்கொலை செய்த மாணவன் உயிர்வாழ்வதாகவிருந்தால் அவருடைய உயர்ந்த உள்ளக்கிடக்கையின்பாற்பட்டு எதிர்காலத்தில் தலைசிறந்த மக்கள் சேவகனாகப் பரிணமிப்பாரெனப் பறைசாற்றியுமுள்ளார். உண்மையில் எல்லா வகையிலும் சாவகச்சேரி நீதிபதி அவர்கள் மாணவன் செந்தூரனின் இயல்பைமிகவும்சரியாகஎடைபோட்டஒரு புண்ணியவதியெனவே கருதவேண்டும். அன்னாருக்குள்ளதைப்போன்ற உயர்ந்த உள்ளம் தமிழ்த்தேசியவாதிகளுக்கு இல்லாமலுள்ளது மட்டுமல்ல அதற்குப் பதிலீடாக மிகவும் கீழ்த்தரமான மனோபாவமும் கடைந்தெடுத்த மூன்றாந் தர அரசியல் இலாபம் பெறும் இயல்பும் அவர்களுக்கு உள்ளமைதான் மிகவும் துரதிட்டவசமானது. இவ்விடத்தில் கூட்டுவன்புணர்ச்சியின் பின் கொலையுண்ட புங்குடுதீவைச் சேர்ந்த வித்தியா என்னும் வித்தியாலய மாணவி உயர்வாழ்வாராகவிருந்தால் அவருடைய எதிர்காலம் தொடர்பில் செந்தூரன் தொடர்பிலான வருங்காலஞ் சார்பாகச் சாவகச்சேரி நீதிபதி தெரிவித்த அபிப்பிராயத்தை அடியொற்றி ஆராய்ந்து தெளிவுபெறவும் வேண்டும். வித்தியாவினுடைய ஊடகத்துறை சார்ந்த உயர்கல்வி நாட்டமும் அவருடைய தோற்றப்பாடு தோற்றப்பொலிவுஎன்பவற்றின்பாற்பட்டும் எதிர்காலத்தில் களிப்புமிகு குடும்பவாழ்வில் ஈடுபடக்கூடியவராக விளங்கியபோதுங்கூட அவ்வாழ்வை அநியாயமாக காமுகர்கள் பறித்தெடுத்தமை போன்றே தவறான அரசியல் உணர்ச்சிப் பிரவாகம் செந்தூரனின் உயிரையும் பறித்துள்ளது.

மேலும் ஆளுங்கட்சியிலுள்ள சிலர் தற்கொலை செய்வதன் மூலம் தமிழ் அரசியல்வாதிகளை விடுவிக்க முடியுமா? எனவும் வினவியுள்ளார்கள். இவ்வாறான ஒரு கேள்வி ஆளுந்தரப்பிலிருந்து எழுவதனால் அது இயல்பானவொன்றேயென்னும் எண்ணப்பாங்கினால் விமர்சனத்திலிருந்து தவிர்த்துக் கொள்வதே பொருத்தமாகும். அத்தோடு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர அவர்களும் தன்னுடைய அமைப்புக்கும் தனக்கும் பொருந்தக் கூடியதாகப் புலிகள் தமிழ் ஈழத்தைப் பிரித்தெடுப்பதற்கு இவ்வரசாங்கம் உறுதுணையாக உள்ளதெனவும் ஆதலால் புலிகள் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சிறைக்கைதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி முயற்சியாகக் கோப்பாய் மாணவனின் நடவடிக்கை அமைந்திருக்கலாமெனவும் தனது அரசியல் எண்ணோட்டத்தோடு இயைந்ததான ஓர் அருவருக்கத்தக்க கருத்தையும் வெளியிட்டுமுள்ளார்.

08ஆம் பக்கம் பார்க்க...

வீரப்பதி விநோதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டமும், தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலையும்



பயங்காவாதத் தடைச்சட்டம். 1979இல் தற்காலிக ஏற்பாடாகக் கொண்டுவரப்பட்டாலும். 1982இல் இது நிரந்தரச் சட்டமாயிற்று. இந்தச் சட்டம். குற்றஞ்சாட்டாமல் ஒருவரைத் தடுத்துவைக்கச் செய்கின்றது. இப்போது அவசரகாலச்சட்டத்தின் சரத்துகள். சாறுகள் அனைத்தையும் உறுஞ்சிக்கொண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னும் அதிக பலத்துடன் நிற்கிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம். இப்போது அதிக அதிகாரங்களை முப்படையினருக்கும். பொலிசாருக்கும் வழங்குகின்ற அளவுக்கு வலுப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் இதை சட்டரீதியாக வலுப்படுத்தும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டால். உயர் பாதுகாப்பு வலயங்களை வைத்திருக்க முடியாது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப் பட்டுள்ளவர்களை தொடர்ந்து சிறையில் வைத்திருக்க முடியாது. விடுவிக்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடையைத் தொடரவும். அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களை தொடர்ந்து தடுத்து வைக்கவும். உயர் பாதுகாப்பு வலயங்களை தொடர்ந்து பேணவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயங்களைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஊடாக வழிதேடியுள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் தான் இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனம் செய்யப்பட்டன. போரைக் காரணம் காட்டியே உயர் பாதுகாப்பு வலயங்களை அரசாங்கம் உருவாக்கியது. இப்போது போரும் இல்லை. அவசரகாலச்சட்டமும் இல்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்துக்கு உயர் பாதுகாப்பு வலயங்கள் தேவைப்படுகின்றன. இந்த உயர் பாதுகாப்பு வலயங்களை நாட்டின் எங்காவது ஒரு மூலையில் பிரகடனம் செய்திருந்தால் பரவாயில்லை. ஆனால் பொதுமக்களின் நிலங்களைப் பறித்தே இவை உருவாக்கப்பட்டுள்ளன. மக்களின் அன்றாட வாழ்வைப் பாதிக்கும் வகையிலேயே இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் செயற்படுகின்றன.

இந்த நிலையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பலனை உயர் பாதுகாப்பு வலயங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் அனுபவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவசரகாலச்சட்டம் போனாலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் அவர்களின் சொந்த மண் மீதான உரிமையை மறுக்கிறது. இந்த உயர் பாதுகாப்பு வலயங்களால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருப்பது தமிழர்கள் தான். அதனால் தான் இந்த விடயத்தை சிறிலங்கா அரசாங்கம் கண்டு கொள்ளாமலேயே இருக்கிறது. தெற்கிலும் சில உயர் பாதுகாப்பு வலயங்கள் இருந்தாலும். அவற்றினால் சிங்கள மக்களின் அன்றாட இயல்பு வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால் வடக்கு. கிழக்கிலுள்ள தமிழர்கள் தான் இந்த உயர் பாதுகாப்பு வலயங்களால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டாலும் இவர்களின் அவலங்கள் தீரப்போவதில்லை. அதற்கு அப்பாலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. அவசரகாலச் சட்டத்தின்கீழ்தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகள். முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு சிலரிடம் இருந்தாலும் அதுபற்றி குழப்பங்கள் தான் மிஞ்சியுள்ளன. அக்காலத்தில் அவசரகாலச்சட்டம் நீக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டதுமே. அமைச்சர் வாசுதேவ நாணயக்கார 6000 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்று கூறினார். ஆனால் சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ. சட்டமா அதிபர் மொகான் பீரிஸ். அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த போன்றோர் அவசரகாலச் சட்டத்தின்கீழ்தடுத்துவைக்கப்பட்டுள்ள ஒருவரைக்கூட வெளியேவிட முடியாது என்று கூறியிருந்தனர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள 1200 பேர் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும். மேலும் 1000 இற்கும் அதிகமானோர் மீது வேறொரு புதிய சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூட அப்போது தெரிவித்திருந்தார். ஆனால் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களை தொடர்ந்து தடுத்து வைப்பதற்கென்ற சட்டமூலம் ஒன்றைக்கொண்டு வரவுள்ளது. அதன் கீழ் தான் அவசரகால சட்டத்தின் கீழ் கைதானவர்களை அரசாங்கம் தடுத்து வைக்கவுள்ளது. ஆக சட்டங்கள் தான் மாறப் போகின்றனவே தவிர. சிறையில் உள்ளவர்களின் விடுதலை சாத்தியமாகப் போவதில்லை.

அதுமட்டுமன்றி அவசரகாலச்சட்ட நீக்கம் தொடர்பாகவும் சரி. அதன் விதிகளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் சேர்ப்பதுபற்றியும் சரி அமைச்சரவையில் விவாதிக்கப்படவில்லை என்றே தெரிகிறது. ஏனென்றால் இந்த விவகாரம் அமைச்சரவையில் விவாதிக்கப் பட்டிருந்தால். அமைச்சர்கள் அனைவரும் ஒரே கருத்தையே வெளியிட்டிருப்பார்கள். ஆனால் ஒரு தரப்பு சொல்கிறது ஒருவரைக்கூட விட முடியாது என்று. இன்னொரு தரப்பு சொல்கிறது ஒரு பகுதியினர் விடுவிக்கப்படவுள்ளனர் என்று. இதில் எது சரி. யார் சொல்வது உண்மை? எல்லோரும் அமைச்சர்களாகவும். உயர் அரச அதிகாரிகளாகவும்இருக்கும்நிலையில் எவரது கருத்தை நம்புவது என்று குழப்பங்கள் மக்களுக்கு மிஞ்சியுள்ளது. அவ்சரகாலச்சட்டம் இப்போது பெயரளவில் தான் நீக்கப்பட்டுள்ளது. அது வேறொரு வடிவத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பெயரால் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கப்போகிறது. அவசரகாலச்சட்டத்தை நீக்குமாறு கோரி வந்த நாடுகள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முடிவை வரவேற்றிருந்தன.

ஆனால் அந்த நாடுகளுக்கு அவசரகாலச்சட்டத்தை நீக்குகிறோம் என்று கூறிக்கொண்டு. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பலப்படுத்தியுள்ளது அரசாங்கம். என்னதான் அழுத்தங்கள் கொடுத்தாலும் சிறிலங்கா தன்னை மாற்றிக் கொள்ளவில்லை. அதுபோல. சிறிலங்கா அரசின் இந்த நடவடிக்கையை சர்வதேச சமூகமும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. சர்வதேச சமூகத்தின் இந்தப் போக்கு சிறிலங்கா அரசுக்கு மேலும் உத்வேகத்தை அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இன்றைய நிலையினை நோக்கும்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது முக்கியம் பெறுகின்றது. 2016ஆம் ஆண்டுக்குரிய வரவுசெலவுத்திட்டம் மீதான வாசிப்பிலும் கூட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு காணாமற் போனோர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டோர் விடுதலை செய்யப்படவேண்டும் என்பது பற்றியும் வலியுறுத்தியுள்ளனர். அதே நேரம் வரவுசெலவுத் திட்டத்தினை எதிர்த்துப்பேசியவர்கள் அதனை ஆதரித்தமைக்கான காரணமும் இருக்கின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் ரீதியான தீர்வுகள் உடனடியாக • கிடைக்கவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம். தாம் ஆதரவாக வாக்களிக்காமல் போனால் அரசியல்கைதிகளின் விடுதலை என்னவாகும்? தமிழ் மக்களுக்கான நிரந்தரத்தீர்வுகள். மீள்குடியேற்றம். வடமாகாணசபைக்குரிய அதிகாரங்கள் என்பனவும் வழங்கப்படாது போகும் என்கின்ற காரணத்தினால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அரசுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் தமிழினத்தை தொடர்ந்தும் அடக்கியாளுவதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடுகின்றது. இதே பயங்கரவாதத் தடைச்சட்டத்தினால் தான் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப்போராட்டங்களையும். தமிழ் மக்களது செயற்பாடுகளையும். வாழ்வாதார உரிமைகளையும் முன்னெடுத்து உரிய முறையில் பெற்றுக்கொள்ள இயலாமல் போனது. தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது இந்நிலை [illegible]வதையே அரசு விரும்புகிறது. ஆ[illegible]மும் அரசிற்கு கால அவகாசம் வழங்கியாவது தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வுகளை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஈடுபடுகின்றது.

நாம் முன்பு குறிப்பிட்டதைப் போன்று உயர் பாதுகாப்பு வலயங்களை பாதுகாத்துக்கொள்வதற்கு அரசிற்கு பயங்கரவாதத் தடைச்சட்டமே தேவைப் படுகின்றது. சர்வதேச நாடுகள் பிரபாகரனுடைய தலைமையை விரும்பாமல் [illegible] காரணம் அவரது தற்கொலைக் குண்டுத்தாக்குதலே. மீண்டும் இலங்கையில் ஆயுதப் போராட்டத்தை உருவாக்க சர்வதேச நாடுகள் முயற்சிசெய்துவரும் நிலையில். இலங்கையில் இன்னமும் விடுதலைப்புலிகள் இருக்கின்றார்கள் என்ற ரீதியில் தமிழ் இளைஞர் யுவதிகளைக் கைதுசெய்து விசாரணை நடாத்துவதிலும் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. அவ்வாறாயின் யுத்தம் நிறைவடைந்துவிட்டது. நாட்டில் சமாதானம் நிலவியிருக்கின்றது என்றெல்லாம் ஏன் இவர்கள் கூறவேண்டும்? கேட்டால் ராஜதந்திர அரசியல் நடவடிக்கைகள் எனக்கூறுகின்றார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைக்கேட்டால் கிடைத்ததும் நமக்கு இல்லாமல் • போய்விடும் எனக்கூறுகிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போராடி வெற்றிபெற முடியாது என்கின்ற காரணத்தினாலும். வடகிழக்கினை விடுதலைப்புலிகள் கேட்டபோது அதனை வழங்கமுடியாது என்ற காரணத்தினாலும். விடுதலைப்புலிகளுடன் தொடர்ந்து யுத்தம் செய்ய முடியாது என்கின்ற நிலையில் அரசு சர்வதேச நாடுகளை அணுகி தமிழரான லக்ஸ்மன் கதிர்காமரைக்கொண்டு விடுதலைப்புலிகளுக்கெதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை கொண்டு வந்தது. இதனது தொடர்ச்சிதான் இன்றும் தொடர்கதையாகத் தொடர்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கி தமிழ் மக்களுக்கான தீர்வுகளை உடனடியாக வழங்கவேண்டும் என முன்பிருந்தமையைவிட தற்போது சர்வதேச நாடுகள் அரசிற்கு அழுத்தம் பிரயோகித்து வருவதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கூறுகிறது. அதற்காகவே சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்கின்றோம் எனக்கூறுகின்றது. அதற்காகவே அரசுடன் இணக்கப்பாட்டு அரசியல் எனக்கூறிக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு அரசு தீர்வினை வழங்காதுவிடின் மீண்டும் அஹிம்சைரீதியிலானபோராட்டங்களை ஆரம்பிக்கவேண்டும். அது ஒருவேளை பின்னர் ஆயுதப்போராட்டமாகவும் மாற்றம் பெறலாம்.

அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் மீண்டும் தமிழினத்திற்குள் பிரிவினைகளையும். கலவரங்களையும் உருவாக்கும் நோக்கிலேயே அமையப்பெற்றுள்ளது. விடுதலைப்புலிகளது போராட்டம் இலங்கையில் இல்லாதொழிக்கப் பட்டுள்ளது என்றால். பிரபாகரன் மற்றும் பொட்டம்மான் போன்றோர் போர்க்களத்தில் கொல்லப்பட்டார்கள் எனில். யுத்தம் நிறைவடைந்து ஆறு ஆண்டுகளைக் கடந்துள்ள இந்நிலையிலும் ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமல் இருக்க வேண்டும்.

மைத்திரி-ரணில் இருவரின் பசப்பு வார்த்தைகளை மீண்டும் நம்பியாகவேண்டிய சூழ்நிலைக்குள் தமிழினம் தள்ளப்பட்டிருப்பதானது வரலாற்றில் மீண்டுமொரு அழிவைத் தோற்றுவிக்கும் ஒரு செயற்பாடாகவே எண்ணத்தோன்றுகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசாங்கம் இலங்கையில் இருந்து நீக்கினாலும் அதற்கொப்பான இன்னுமொரு சட்டத்தினை உருவாக்கிக்கொண்டே பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கும் என்பதில் சந்தேகமில்லை. அது வரையில் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை என்பதும் கேள்விக்குறியே.

**சுழியோடி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் சரியான தலைமை சம்பந்தனா? விக்னேஸ்வரனா?



ஒரு நாட்டில் ஒவ்வொரு இன மக்களைப் பிரதிபலிப்பதற்கும் அரசியல் சார்ந்ததாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எனவும் இதனைவிட பல்வேறு தரப்பட்ட கட்சிகள் இருப்பது என்பது வழமையானவொன்று. குறிப்பாக இன, மத, மொழி அடிப்படையிலும் இவை வித்தியாசப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை மூவின மக்களாக குறிப்பாக சிங்களம், தமிழ், இஸ்லாம் என்ற ரீதியில் வாழ்கின்றனர். இதில் முஸ்லீம் இனத்தவர்களும் தமிழ்பேசும் மக்கள் என்கின்ற வரையறைக்குள் தான் உள்ளடக்கப்படுகின்றனர். அரசியலின் ஆரம்பகாலகட்டத்தில் தமிழரசுக் கட்சியுடன் மிக நெருக்கமாக இருந்த மறைந்த அஷ்ரப் அவர்கள் பின்னர் முஸ்லீம் காங்கிரசினை நிறுவினார். அவருக்குப் பின்னர் வந்த முஸ்லீம் பிரதிநிதிகள் அக்கட்சியிலிருந்து பலவாறாகப்பிரிந்து சென்றிருக்கின்றனர். இதுபோன்று தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயக முன்னணி, ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி என்ற அடிப்படையில் பல கட்சிகள் காணப்படுகின்றன.

விடுதலைப்புலிகளுடைய போராட்டம் 2009வரையிலும் இந்நாட்டில் நிலவியது. அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவினது அரசாங்கமே ஆட்சிசெய்தது. தமிழீழ விடுதலைப்புலிகளைப் பிளவடையச்செய்த வேகத்தில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினை பிளவுபடுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும்தோல்வியில் முடிவடைந்தது. அதன்பின்னர் தற்போதைய மைத்திரி-ரணில் தலைமையிலான அரசாங்கம் அதே நிகழ்ச்சிநிரலைக்கையாண்டு த.தே.கூட்டமைப்பையும், வடமாகாணசபையையும் பிரித்தாளுவதற்கான ஒரு செயல்வடிவத்தைக் கொண்டுவந்தது. இதன் காரணமாக இன்று தமிழ் மக்களுடைய தலைவராக விக்னேஸ்வரன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடுகள் ஒரு வடிவிலும், வடமாகாணசபையினது செயற்பாடுகள் மறுவடிவிலும் பயணித்துக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஆனாலும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை அரசியலுக்குள் பிரவேசிக்கச்செய்து, வடமாகாணசபையின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தி, அவர் வெற்றிவாகை சூடுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் உயர்மட்டத் தலைவர்களே மும்முரமாகச் செயற்பட்டார்கள். அதில் அவர் அதிகளவிலான வாக்குகளைப் பெற்று வெற்றியும் பெற்றார். இன்று முதலமைச்சர் பதவியிலிருக்கும் இவருக்கும், த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களுக்கும் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட முறுகலானது இன்று த.தே.கூட்டமைப்பையும், வடமாகாணசபையையும் பிரித்துப்பார்க்கும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. இதனை சீர்செய்யும் நோக்கில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனால் எவ்விதமான முடிவுகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமே.

நிலைமைகள் இவ்வாறிருக்க இப்பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துவைக்கும் பொறுப்பு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடமே இருக்கின்றது. வடக்கின் முதலமைச்சரும், ஏனைய அமைச்சர்களும், உறுப்பினர்களும் இணைந்து வடமாகாணத்தைக் கட்டியெழுப்ப இயலும் என நினைக்கின்றார்கள். குறிப்பாக இந்த அமைச்சரவைக்குள் கட்சி சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுடைய நிலைப்பாடுகளும் விக்னேஸ்வரன் தவறு இழைக்கவில்லை என்பதேயாகும். ஆனாலும் ஒருசில வடமாகாணசபையின் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைப் பதவியை தக்கவைத்துக்கொள்ளலாம் என நினைப்பது மடமைத்தனம். அரசியலில் மாற்றங்கள் ஏற்படுவது என்பது வழமையானதொன்று. அதற்காக எமது கொள்கைகளைக் களைந்து, அரசாங்கத்துடன் இணைந்து சாயம்பூசுவது என்பது ஏற்றுக்கொள்ளப்படமுடியாததொன்று. வடமாகாணசபையின் முதலமைச்சராக பதவியேற்ற காலத்திலிருந்து சிறிது காலம்வரை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு இலங்கையில் என்ன நடந்தது என்ற விபரங்கள் தெரியாதிருந்தது. முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை இடம்பெற்றதா? அதுவும் அவருக்குத் தெரியாது. ஆனால் அதன்பின்னர் புத்த பகவான் ஏழைக்கோலம் பூண்டதுபோன்று வீதியில் இறங்கி நடந்த முதலமைச்சர் அவர்களுக்கு தற்போதுதான் தமிழர் பற்றி ஞானம் பிறந்திருக்கின்றது.

தந்தை செல்வா காலந்தொடக்கம் இன்றைய வரையில் எத்தனையோ தமிழ்த்தலைவர்கள் விக்னேஸ்வரனுக்கு ஒத்த கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் அவர்கள் இன்றுஉயிருடன் இல்லை. யுத்தகாலத்தில் தமது கருத்துக்களை வெளியிட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அரசினால் கொல்லப்பட்டார்கள் என்பது வரலாறு. இன்று யுத்தம் நிறைவடைந்த காரணத்தினால் தமிழ்த்தேசியம், சுயநிர்ணய உரிமை, இனப்படுகொலைகள் தொடர்பாகவும் துணிவாகச் பேசுகின்றார் முதல்வர். உண்மையில் இவ்விடயம் வரவேற்கத்தக்கது.

அக்காலகட்டத்திலிருந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் இன்றும் இருக்கின்றார்கள். ஆனால் இவரைப்போன்ற துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளது தூண்டுதலின் அடிப்படையில் சுமந்திரன் அவர்கள் வடமாகாணசபையின் முதலமைச்சருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததாகக் கூறப்படுகின்றது. தற்போது அவரைக் கட்சியிலிருந்து நீக்க முயற்சிசெய்வதென்ற விடயத்தினை யாராலுமே ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும், தமிழரசுக்கட்சிக்கும் விக்னேஸ்வரன் துரோகம் இழைத்தாரா? எனப்பார்க்குமிடத்து ஒருசில அரசியல்வாதிகள் மாத்திரம் இவரைப்பற்றிக் குறைகூறுகிறார்கள். எவ்வாறிருப்பினும் ஒட்டுமொத்த தமிழினத்தின் தலைவராக விக்னேஸ்வரனை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியலின் ஒருபக்கத்தினை மாத்திரமே இவர் பார்க்கின்றார். அதனது மறுபக்கத்தினையும் பார்க்கவேண்டும். கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அரசியலில் அனுபவம் வாய்ந்த சம்பந்தன் அவர்கள் ஒரு தலைமைத்துவம் வகிப்பதற்குத் தகுதியானவர். அரசியலில் பல்வேறு களம் கண்டவர். ஒரு இனத்தின் விடுதலை என்பது இரு வருடங்களில் தீர்ந்துவிடுவது அல்ல. பல தசாப்த வரலாறுகளின் பின்னரே விடுதலைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த விடுதலை எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்கின்ற விடயங்களைப் புரட்டிப்பார்க்கும்போது அதுஒரு கடினமான பாதை என்றே கூறமுடியும். ஆரம்பகாலப்போராட்ட வடிவங்கள் என்பது முற்றிலும் வேறுபட்டது. குறிப்பாக 30வருடங்களைப் பின்னோக்கிப் பார்க்கும்போது அஹிம்சைப் போராட்டம் என ஆரம்பித்து பின்னர் அது ஆயுதப் போராட்டமாக மாற்றம்பெற்றது. இதில் ஏற்பட்ட அழிவுகள்ஏராளமானவை. பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டதைப்போன்று இரு எஜமானர்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. அதில் எழும் பிரச்சினைகள் பல. அதுபோன்ற ஒரு அரசியல் நிலைமைதான் இன்று கூட்டாட்சி என்கின்ற பெயரில் தொடர்கின்றது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஆதரவாளராக ரணில் விக்கிரமசிங்கவும், வடமாகாணசபையின் ஆதரவாளராக மைத்திரிபால சிறிசேனவும் செயற்படுகின்றனர். நாட்டின் பிரதமர் முதலமைச்சரை ஒரு எதிரியாகவே பார்க்கின்றார். காரணம் என்னவெனில் இனப்படுகொலை என்கின்ற தீர்மானத்தினை வடமாகாணசபையில் நிறைவேற்றியது அரசுக்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியதாலாகும்.

இனப்படுகொலை என்கின்ற தீர்மானத்தினை செயலிழக்கச்செய்வது என்பது விளையாட்டானதொரு காரியமா? இவ்விடயம் பாரதூரமானது. இதனை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு விரும்புகின்றதா? என்கின்ற கேள்வியும் முன்வைக்கப்படுகின்றது. செயலிழக்கப்படுமாகவிருந்தால் சர்வதேசத்திற்கு தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் சாதாரணமாகக் காட்டப்படும். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு இதுவரையில் இனப்படுகொலைஎன்கின்ற தீர்மானத்தினை முன்னெடுக்கவில்லை என்பது கவலைக்குரியவிடயம். முன்னெடுத்த வடமாகாணசபையைப் புறந்தள்ளிச் செயற்படுவது துரோகத்தனம். தமிழினத்திற்குள்ளேயே பிழைகளைக் கண்டு சாதித்த வரலாறுகள் இருக்கின்றதா? எனத் தேடிப்பார்த்தால் ஒன்றுமேயில்லை.

காக்கைவன்னியனிலிருந்து ஆரம்பித்த காட்டிக்கொடுப்புக்கள் இன்றுவரையில் தொடர்ந்துகொண்டிருக்கின்றது. இன்றுவரை மறைமுகமாகவோ, நேரடியாகவோ சம்பந்தன் அவர்கள் முதலமைச்சரை சந்தித்துப்பேசியதாக தகவல்கள் வெளியாகவில்லை. இதனது உள்நோக்கம் பற்றிப்பார்க்கும்போது அரசாங்கம் திட்டமிட்டே வடமாகாணசபையினை பிரிவினைக்குட்படுத்தி வடகிழக்கினைப் பிரித்ததுபோன்று சம்பந்தன் தலைமையில் ஒருகட்சியினையும், விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு கட்சியினையும் உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. பிரபா-கருணா பிரிவு என்பது விடுதலைப்போராட்டத்தில் பாரிய பிளவினை ஏற்படுத்தியது. ஆனால் அதனது உண்மைத்தன்மைகள் பின்னர் தெளிவாகத்தெரிந்தது. ஆயுதமுனைகளில் அஸ்தமித்த கருணா குழுவினர் மக்களைப் பயமுறுத்தி கிழக்கு மாகாணத்தில் TMVP என்ற தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியில் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சர் பதவியினை சிவனேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) அவர்கள் கைப்பற்றி கிழக்குமாகாண முதல்வராக பதவியிலிருந்தார். இவர்களுடைய செயற்பாடுகள் தமிழினத்திற்கும் மக்கள் தகுந்த பதில் வழங்கியுள்ளனர்.

இந்த அரசாங்கத்தினால் கருணா, பிள்ளையான் குழுவினர் போன்ற ஆயுதக் கட்சிகள் அனைத்தும் மீண்டும் செயற்பட இயலாத நிலைமைகள் உருவாகியுள்ளது. அதனொரு கட்டமாகவே பிள்ளையான் இன்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சட்டத்தைக் கரைத்துக்குடித்த நீதியரசர் அரசியலின் நெளிவு சுழிவுகளையும் அறிந்துகொள்ளவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளார். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்களைப் புறந்தள்ளிவிட்டு அரசியல் நடாத்துவது என்பது தமிழ் மக்களின் ஒற்றுமையினைச் செயலிழக்கச்செய்யுமே தவிர, தமிழ் மக்களது இனவிடுதலைக்கும், எதிர்கால வளர்ச்சிக்கும் சாதகமாக அமையாது. ஆகவே இதில் உண்மை என்னவென்பதை கண்டறிந்து தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளவேண்டும். புராதன அரசியலைப்பேசிக்கொண்டு இருப்பதன் ஊடாக எமது விடுதலையினைப் பெற்றுக்கொள்ள இயலாது என்பது உண்மை. முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும், சுமந்திரனுக்கும் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட முறுகல் நிலை ஒட்டுமொத்த தமிழினத்தையே பாதிக்கும் அளவுக்கு வடிவம் பெற்றுள்ளது. இதற்கிடையில் ஏனைய தமிழ் அரசியற்கட்சிகள் ஒன்றிணைந்து ஆனந்தசங்கரியின் கட்சியில் பதிவுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதுதொடர்பாக ஆனந்தசங்கரி அவர்கள் செவ்வி வழங்கியபோது, விக்னேஸ்வரனின் தலைமையில் தமிழர் விடுதலைக்கூட்டணியினை கையளிப்பதற்குத் தயார் எனவும், அவர் தெரிவிக்கும் ஒருவரை தான் செயலாளராக நியமிக்கத்தயார் எனவும் அவர் கூறியிருப்பது தமிழ் மக்களது அரசியலில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும் செயலாகவே அமையப்பெறுகின்றது. வெள்ளம் வருமுன் அணையினைக் கட்டவேண்டும் எனக்கூறுவார்கள். முன்னரே அணை கட்டிக்கொண்டால் தமிழினத்திற்குள் பிளவுகள் ஏற்படாத வகையில் செயற்படமுடியும். தமிழ் மக்களுக்கான தீர்வுகள் கிடைக்கப்போகின்றநேரங்களில் தமிழ் மக்களுக்குள் எட்டப்பர்களை அரசாங்கம் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது அவர்களது பரம்பரைத் தொழில்.

சம்பந்தன் அல்லது விக்னேஸ்வரன் என்ற இருவரில் யாருடைய தலைமையில் எதிர்வரும் காலங்களில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு செயற்படப் போகின்றது என்கின்ற சந்தேகம் கட்சிகளிடையேயும், தமிழ் மக்கள் மத்தியிலும் பூதாகரமாக வெடித்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை அவர் விக்னேஸ்வரனது கருத்துக்களை ஏற்று அதற்கேற்ப செயற்பட முன்வரப்போவதில்லை. அதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அனுமதியளிக்கப் போவதில்லை. காலத்தின் தேவை கருதிய அரசியல் செயல்வடிவங்களை மாற்றவேண்டிய சூழ்நிலையே இன்று இருக்கின்றது. இனப்படுகொலை நடந்தது என்று ஒரு சாரார் கூறிக்கொண்டிருக்க, இல்லை என்று மறுசாரார் கூற, இதனை சர்வதேசத்திற்கு இந்த அரசாங்கம் வெளிச்சம்போட்டுக்காட்ட, நடந்த சம்பவங்கள் அனைத்தும் கடந்த அரசில் தான் இடம்பெற்றது. தற்போதைய அரசில் இல்லை என்ற நோக்கிலே அரசின் செயற்பாடுகள் அமைந்துள்ளது. தமிழ் மக்களது ஒற்றுமை என்பது அவசியம். அந்த ஒற்றுமையினை சீர்குலைக்கும் நோக்கில் எவர் செயற்பட்டாலும் அதனை எதிர்த்து போராடவேண்டிய தேவை தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. அவ்வாறு போராடத் தவறினால் தமிழினம் மீண்டுமொரு அழிவின் பாதையினை நோக்கிச்செல்லும்.

11ஆம் பக்கம் பார்க்க...

நெற்றிப்பொறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன அழிப்புக்கான விசாரணையைக் கோரிய தீர்மானத்தை உரிய தருணத்தில் நிறைவேற்றுவதற்கான சூழலை உருவாக்கினோம். இதனால் முதலமைச்சரை விழிப்புறச் செய்தோம் என வடமாகாண சபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் அவர்கள் தினப்புயல் ஊடகத்திற்கு பரபரப்புச் செவ்வி.**

**கேள்வி:–** ஐ.நா. மனித உரிமைச் சபையின் விசாரணை அறிக்கை ஒரு சர்வதேச விசாரணை என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?

**பதில்:-** இலங்கையில் இடம்பெற்ற சர்வதேசக்குற்றங்கள் தொடர்பான ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தால் . மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையே அது. அந்த ஆய்வு சர்வதேச மட்டத்திலேதான் நடந்தது. ஆனால், அது ஒரு குற்றவியல் சார்ந்த விசாரணை அல்ல. ஏற்கனவே ஐ.நா மன்றம் இரண்டு ஆய்வுகளைச் செய்திருந்தது. முன்னையவற்றைவிடவும் பருமனில் பெரிதான ஆய்வாகவே அது அமைந்தது. அந்த ஆய்வு அடுத்த கட்டமாகச் சர்வதேசக் குற்றவியல் நீதி விசாரணையைக்கோரும் என்று நான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அது ஒரு கலப்பு நீதிப்பொறிமுறையைப் பிரேரித்திருக்கிறது.

**கேள்வி:–** சரி. அந்த ஆய்வில் தமிழர் தரப்புச் சாட்சியங்கள் சரியான முறையில் முன்வைக்கப்பட்டதா?

**பதில்:-** உண்மையில் பாதிக்கப்பட்ட மக்கள் நேரடியாக சாட்சியங்களை வழங்குமளவுக்கு முடியாத சூழல் இலங்கைத்தீவில் கடந்த வருடம் இருந்தது. அப்போதிருந்த ராஜபக்ச அரசு அதற்கு அனுமதிக்கவில்லை. அதே வேளை சிங்கள இராணுவப் புலனாய்வு கடும் நெருக்கடிகளைக் கொடுத்துவந்தது. தாயகத்தில் ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் சாட்சியம் கொடுப்பது தொடர்பான தெளிவான அறிவும் இருக்கவில்லை. என்னைச் சிங்களப் புலனாய்வுத் துறையினர் பின்னும் முன்னும் தொடர்ந்து கொண்டிருந்தார்கள். ஆனாலும், என்னால் முடிந்தவரை மக்களை சாட்சியம் கொடுக்குமாறு வலியுறுத்தினேன். புலம்பெயர் உறவுகள் சிலரின் உதவியோடு சில முக்கியமான சாட்சியங்களை நானே ஒழுங்குபடுத்திக் கொடுத்திருந்தேன். தவிரவும், நானும் நேரடியாக ஜெனீவா சென்று எழுத்துமூலமும் வாய்மூலமும் எனது சாட்சியத்தைப் பதிவு செய்தேன். சாட்சியங்களின் தொகையை விடவும், படிவங்களை நிரப்புவது போலவும் அல்லாமல் கொடுக்கப்படுகின்ற சாட்சியங்கள் வலுவுள்ளதாக அமையவேண்டும் என்பதையே நான் வலியுறுத்தினேன். அதே வேளை ஏதோ படிவங்களை நிரப்பி அனுப்பிவிட்டால் போதும் என்ற மனப்பான்மையில் சிலர் களத்தில் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அதன் போதாக்குறைகளைப் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டி மக்களைக் குழப்புவதாகப் போய்விடக்கூடாது என்றும் என்னால் இயன்றவரை தரமாக, வலுவுள்ள சாட்சியங்களைப் பதியச் செய்யவேண்டும் என்பதையே எனது குறிக்கோளாகக் கொண்டு நான் இயங்கினேன். உண்மையில் எமக்கிருந்த நெருக்கடிக்கு மத்தியில் வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் போதாது இருந்தது. மார்ச் 2014 இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒகஸ்ட் 2014இன் ஆரம்பத்திலேயே உயர்ஸ்தானிகரின் அலுவலகம் சாட்சியங்களைச் சமர்ப்பிப்பதற்கான அதிகாரபூர்வ அறிவித்தலை வெளியிட்டது. மிகவும் குறைந்த மூன்று மாதங்களே எமக்குத் . தரப்பட்டது. ஒக்டோபர் 30ம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் சாட்சியங்களை மின்னஞ்சலில் அனுப்பிவைக்குமாறு கோரியிருந்தார்கள். அதைப்போல 30ம் நள்ளிரவுடன் அதை முடித்துக்கொண்டார்கள். குறித்த கால எல்லையின் முடிவில், சாட்சியங்களை வழங்குவதற்கான கால எல்லையை நீடிக்குமாறுநான் மனித உரிமைஉயர்ஸ்தானிகரின் அலுவலகத்துக்கு பகிரங்கமான வேண்டுதலைக்கூட விடுத்திருந்தேன். ஆனால் அந்த நியாயமான வேண்டுகோள் வயலுக்கு இறைத்த நீராகியது. கால எல்லையை அவர்கள் நீடிக்கவில்லை. இந்தச் சம்பவம் ஒரு வரலாற்றுப் பதிவாகும். ஏனென்றால், பின்னாளில் இலங்கை அரசுக்கு அனுசரணையாக அறிக்கையை வெளியிடுவதற்கு ஆறுமாதங்கள் தாமதிக்கிறார்கள். இருந்த கால அவகாசத்துக்குள் கொடுக்கப்பட்ட சாட்சியங்களின் தரம் போதாது என்பதே எனது கருத்து. ஏனென்றால், அதைச் செய்யவேண்டிய தமிழரின் அரசியல் தரப்புகளும் வேண்டுமென்றே தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஏதோ, சாட்சியத்தைக் கொடுக்குமாறு தாங்கள் சொன்னால், சாட்சியங்களை வலிந்து கொடுத்ததாகிவிடும் என்பது போன்ற கருத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள்.

**கேள்வி:–** ஏன் தமிழ் அரசியல் தலைமை அதைச் செய்யவில்லை?

**பதில்:-** சர்வதேச விசாரணை நோக்கிய கோரிக்கை வலுவடையக்கூடாது என்று கருதும் சில விதண்டாவாதிகள் தமிழர் அரசியலைத் தமது கையகப்படுத்தி, எம் போன்றவர்களை ஓரங்கட்டி நடாத்திய கேவலமான அரசியலே உள்ளுக்கு ஓடிக்கொண்டிருந்தது. இன்னொரு முனையில் வடமாகாண சபைக்கு ஊடாக என் போன்றவர்கள், குறிப்பாக திரு.சிவாஜிலிங்கம் அவர்களின் முனைப்போடு, போராடினோம். அதிலே வெற்றியும் கண்டோம்.

**கேள்வி:–** எந்தவகையில்?

**பதில்:-** இன அழிப்புக்கான விசாரணையைக் கோரிய தீர்மானத்தை உரிய தருணத்தில் நிறைவேற்றுவதற்கான சூழலை உருவாக்கினோம். நாம் வைத்த கோரிக்கையை விடவும் விதண்டாவாதிகளின் அரசியல் நாடகங்கள் முதலமைச்சரை விழிப்புறச் செய்தது. இதன் விளைவாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் நிறைவேறியது.

**கேள்வி:–** சரி, மனித உரிமை உயர் ஸ்தானிகர் ஆய்வு அறிக்கையை தாமதித்து வெளியிடும் தறுவாயில் மேலதிகமாக சாட்சிகளை வழங்கும் சூழல் தமிழ் மக்களுக்கு இருக்கவில்லையா?

**பதில்:-** உண்மையில் மனித உரிமை உயர்ஸ்தானிகரின் அதிகாரிகள் இலங்கைக்கு வந்திருக்கவேண்டும். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. அவர்களுக்கு கொழும்பில் ஏற்படவேண்டிய அரசியல் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பதுங்கும் தேவையே இருந்தது. காலத்தை வீணடித்தார்கள். பாதிக்கப்பட்டவர்களை முன்னிலைப்படுத்தவில்லை. மனித உரிமை எல்லாம் பேச்சளவில் மட்டுமே இருந்தது. அரசுகளின் உரிமையே முன்னுக்கு நின்றது. சாட்சியங்கள் சிலவற்றை புதிய அரசாங்கம் தரும் என்றுகூட தங்கள் கால தாமதத்தை நியாயப்படுத்த விழைந்தார்கள். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களை புதிதாகச் சாட்சியங்களை வழங்க முன்வருமாறு கூறவில்லை. ஏனென்றால் அறிக்கை முன்கூட்டியே தயாராகிவிட்டது என்றார்கள். உண்மையில் அவர்களின் சில கூற்றுக்கள் ஒன்றுக்கொன்று முரணானதாக இருந்தது. இதை வரலாற்றைப் பின்னோக்கி ஆராய்ந்து பார்க்கும் வலுவுள்ள சில ஊடகங்களால் மட்டுமே புரிந்துகொள்ளமுடியும். வெறுமனே செய்திகளை ஒப்புவிக்கும் பல ஊடகங்களால் இதைப் புரிந்துகொள்ளமுடியாது.

**கேள்வி:–** அந்த அறிக்கையை நீங்கள் வரவேற்கிறீர்களா?

**பதில்:-** அந்த அறிக்கையை நாம் ஆரத்தழுவி வரவேற்கவும் இயலாது. அதே வேளை அதை சிங்களத் தீவிரவாதிகள் போல கண்டிக்கவும் இயலாது. அதன் பிரேரணை கலப்பு நீதிமன்றம் என்பது எனக்கு ஆழ்ந்த அதிருப்தியைத்தான் தந்திருக்கிறது.

**கேள்வி:–** அப்படியானால் அதை வரவேற்ற தமிழ்த் தரப்புகள் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** விதண்டாவாதிகளும், விஷயம் புரியாதவர்களும் [illegible] வலி தெரியாதவர்களும் [illegible] நாடகத்தில் ஈடுபட்டார்கள். அவர்களைப் பற்றி நினைத்து எமது முயற்சியையும் நேரத்தையும் வீணடிக்க நான் இனிமேலும் விரும்பவில்லை.



**கேள்வி:–** சர்வதேச சமுகத்தில் ஏதாவது ஒரு நாடாயினும் நீங்கள் சொல்லும் கருத்தை ஏற்றுக்கொள்கிறதா? 25 நாடுகள் இந்த உள்ளக விசாரணையை ஆதரிக்கும் பாணியிலான தீர்மானத்தைத் தானே ஏகமனதாக அங்கீகரித்திருக்கின்றன?

**பதில்:-** சர்வதேச சமுகத்தில் எமது சிக்கலை ஆழமாக விளங்கியவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொள்ள இது வரை தயாராகவில்லை. ஏனென்றால் ஐ.நா சபைக்குள் நடாத்தப்பட்டுக் கொண்டிருப்பது அரசுகளுக்குச் சார்பான அரசியலே. ஆனால், அதற்காக எமது கருத்தும் நிலைப்பாடும் எடுபடவில்லை என்ற முடிவுக்கு வரக்கூடாது. முதலில், 2009 போர் இன அழிப்புக்கூடாக முடிவடைந்த தறுவாயில் இதே ஐ.நா. மனித உரிமைச் சபைதான் இலங்கை அரசு போரை முடித்த விதத்தை வரவேற்றுத் தீர்மானம் நிறைவேற்றியது என்பதை நாம் மறக்கக்கூடாது. இது ஐ.நா சபையின் வரலாற்றிலேயே ஒரு கறுப்புப்புள்ளி. இதைப்போலத்தான் பின்னர் இலங்கை அரசை அதன் சீனச் சார்புப் போக்கில் இருந்து தமது பிடிக்குள் கொண்டுவருவதற்கு அமெரிக்கா ஜெனீவா மனித உரிமைச் சபையைப் பயன்படுத்தியது. இதன் முடிவு எப்படியாக அமைந்திருக்கிறது என்பதற்கு தற்போதைய உள்ளக விசாரணை குறித்த போக்கும் இலங்கையும், அமெரிக்காவும் ஒன்றாகச்சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றியதையும் நாங்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். குறிப்பாக, பாலஸ்தீனியர்களின் சிக்கலில் சர்வதேசத்தில் பல நாடுகள் அவர்களுக்குத் தனிநாடே தீர்வு என்று வாக்களித்துள்ளன. ஆனால், அமெரிக்கா அதை விரும்பவில்லை. அமெரிக்கா முன்வைக்கும் திட்டங்களுக்கெல்லாம் பாலஸ்தீனியர்கள் வரவேற்பு விட்டு அதற்குப் பின்னால் செல்லவில்லை. பாலஸ்தீனியர்கள் தமது கோரிக்கையைக் கைவிடாது கொள்கையின் பாற்பட்டுத் தொடர்ந்தும் தமது கருத்தில விடாப்பிடியாக இருந்துவருகிறார்கள். அமெரிக்காவுக்கு உள்ளும் புறமும் பாலஸ்தீனியர்களின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. ஐ.நாவில் நாம் ஒரு மக்கள் சமுதாயமாக அடிக்கு மேல் அடி அடித்தால் சர்வதேச அபிப்பிராயம் எமக்குச் சார்பாக மாறும் என்பதற்கு பாலஸ்தீனிய விவகாரமே ஒரு உதாரணம். அமெரிக்க அரசின் நிலைப்பாட்டுக்குத் தகுந்தமாதிரியெல்லாம் நாம் தலையாட்டும் பொம்மைகளாக இருப்பது சாணக்கியமான தமிழர் அரசியல் அல்ல என்பதை முதலில் தமிழர்கள் புரிந்துகொள்ளவேண்டும். அமெரிக்காவின் கொள்கை நிலைப்பாட்டில் உடன்பாடு இல்லாதபோதும் என் போன்றவர்கள் அமெரிக்க அரச தரப்பு பிரதிநிதிகளிடமும் எமது கருத்தை துணிச்சலாக முன்வைக்கும் நிலையிலேயே இருக்கிறோம். உண்மையில் சொல்லப்போனால், நாம் என்ன நிலைப்பாடு எடுக்கிறோம் என்பதை அவர்கள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகிறார்கள். இவர்களில் பலர் [illegible] மனிதர்களாக புரிந்துணர்வு [illegible]ர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களின் புரிந்துணர்வு வேறு, அமெரிக்காவின் அரசு ரீதியான இலங்கையுடனான புரிந்துணர்வு வேறு. இந்த நிலைப்பாடு தான் பாலஸ்தீனியரின் சிக்கலிலும் இருந்துவருகிறது. ஆகவே, எமது பாதையில் நாம் உறுதியாக இருக்கவேண்டும்.

**கேள்வி:–** பாலஸ்தீனியர்களுக்கு பெருவாரியான ஆதரவு சர்வதேச சமுகத்தில் இருந்துவருகிறது. ஆனால் எமக்கு அவ்வாறான சூழல் இல்லையே?

**பதில்:-** பாலஸ்தீனியர்களுக்கு இருக்கும் ஆதரவு வெளிப்படையாகத் தெரிகிறது. அதைமேலும் ஓங்கச்செய்யும் செயற்பாட்டில் அவர்கள் தெளிவாகவே இயங்கிவருகிறார்கள். நாமும் அவ்வாறு தான் செயற்படவேண்டும். பாலஸ்தீனர்களைப் போல்த்தான் எமக்கும் ஒரு புலம்பெயர் சமுகம் இருக்கிறது. உலகளாவிய தமிழர், குறிப்பாக தமிழகம், தமிழகத்தைச் சார்ந்து உலகெங்கும் பரவியோர். மலேசியா மூன்றாவது அதிக தொகையில் தமிழ் மக்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு நாடு. இதைப் போல பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இதுவே ஈழத்தமிழர்களுக்கு இன்று இருக்கும் ஒரே ஒரு பலம். பாலஸ்தீனர்களுக்கும் எமக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் அவர்களுக்கு இருக்கும் அரசுகளின் ஆதரவும் எமக்கு அது இல்லாத தன்மையும். இதையே உங்கள் கேள்வி சுட்டிக்காட்டுகிறது. இன்று இஸ்லாமிய மதம் சாராத பல நாடுகளின் தார்மீக அரச ஆதரவை பாலஸ்தீனர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். தமிழருக்கென்று குரல்கொடுக்கும் அரசு ஒன்றில்லை. எது எமது பலவீனமோ அதை எமது பலமாக எடுத்துக்கொண்டு செயற்படவேண்டிய நிலையில நாம் இருக்கிறோம். உலகின் நீண்ட நாகரிகங்களாக, இன்றும் உயிர்வாழும் பழைய மொழிகளாக இருப்பவை சீனம், அரபு, தமிழ் ஆகிய மொழிகளாகும். சீன, அரபு மனித நாகரிகங்கள் இன்றைய புதிய உலக ஒழுங்கில் பல அரசுகளைக் கொண்ட சக்திகளாகவோ அல்லது ஒரு அரசாக இருந்தால்கூட மற்றையவர்களை ஆட்டிப்படைக்கக்கூடிய பெரும் அரசாகவோ விளங்குகிறார்கள். தமிழர்களுக்கு என்று ஒரு நாடில்லை என்பதற்காக உலகளாவிய அரசியலில் நாம் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக எம்மைக்கருதக்கூடாது என்று நினைப்பது அடிப்படையில் மனித குலத்தின் தகைமைக்கே முரணானது. எமது பலம், நாமும் சீனர்களைப் போலவும், அரேபியர்கள் போலவும் உலகில் இன்றும் உயிர்வாழும் மக்கள் சமுகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதே. தோல்வி நிலைப்பட்டுச் சிந்திப்பதையும் ஆதிக்க சக்திகளின் ஏவல்களாக எம்மை நாமே கருதுவதையும் முதலில் நிறுத்திக்கொண்டு, நாம் சிந்திக்கவேண்டும். எமது உட்பலத்தை எல்லா நாடுகளும் முட்டுக்கொடுத்து இலங்கை அரசு அழித்துவிடுவதற்கு காரணமாக இருந்தார்கள். ஆனால், எமது வெளிப்பலம் உலகெங்கும் வாழும் தமிழ் மொழியின் குழந்தைகளான ஒட்டு மொத்த உலகத் தமிழ்ச் சமுதாயமும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஈழத்தமிழர் என்ற தேசிய இனத்திற்கு நடந்த, தொடர்ந்தும் நடைபெறும் அழிவுகளைத் தடுத்து நிறுத்தி வெற்றிகொள்ளவேண்டிய தார்மீகக் கடமை உலகளாவிய தமிழ்ச் சமுகத்திற்கு இருக்கிறது. இதையே முள்ளிவாய்க்கால் உணர்த்தி நிற்கிறது.

12 ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராந்தியச் செய்திகள்

## வல்வெட்டித்துறை ஊரிக்காட்டில் பாமோட்டார் குண்டு மீட்பு

வல்வெட்டித்துறை ஊரிக்காடு பகுதியில் பாமோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியிலுள்ள தனியார் காணியொன்றில் இருந்தே இக்குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த தனியார் காணி உரிமையாளர் தனது காணியில் துப்பரவு செய்தபோதே இக்குண்டு இருப்பதைக் கண்டதாகவும் இதனையடுத்து வல்வெட்டித்துறைபொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து இக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## உரமானியம் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விவசாயிகளுக்கான உர மானியத்தை மீண்டும் வழங்கக்கோரி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் விவசாயிகளின் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றுள்ளது. சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக்காலம் தொட்டு விவசாயிகளுக்கு உர மானியம் வழங்கும் செயற்பாடு நடைமுறையில் உள்ளது. எனினும் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் உரமானியம் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட விவசாயிகளுக்கு மட்டும் உர மானியத் தொகையை பணமாக வழங்கும் ஏற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் வகையில் விவசாயிகள் ஒன்றுதிரண்டு பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

தம்புள்ளை நகரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்தது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் உரமானியத்தைமீண்டும் வழங்குமாறும், நெல்லுக்கு உத்தரவாத விலையை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். மேலும் தமது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் வரை தொடர் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் விவசாயிகள் சம்மேளனம் அறிவித்துள்ளது.

04ஆம் பக்கம் பார்க்க...

அன்னாருடைய கருத்தின் உள்ளடக்கம் விஷமத்தனமானவொன்றாகவிருந்த போதுங்கூடச் சதி முயற்சி என்னும் அபிப்பிராயம் மட்டில் கருத்துக்கெடுக்கப்படவேண்டியதொன்றாகவும் போகப்போக புரிந்துகொள்ளும் தன்முனைப்பு சகலருக்கும் இருக்கவேண்டுமென்னும் உண்மையையும் புலப்படுத்தி நிற்குமொன்றாகவுமே கொள்ள முடிகின்றது.

சுருங்கக்கூறின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தொடக்கம் அரசதரப்பினர் இடையிட்டுத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர்வரை மாணவன் செந்தூரனின் தற்கொலை மரணத்தைத் தத்தம் அரசியலின் களப்பகுதிக்குள் அமிழ்ந்து நின்று விமர்சனங்களைத் தாராளமாக அள்ளி வீசியுள்ளார்களெனவே கூறவேண்டும்.

சகல அரசியல்வாதிகளின் அபிப்பிராயங்களும் தத்தம் கட்சிகளினதும் தமதும் நலன் கருதியவொன்றாகவே குறுகிய வட்டத்துக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சாவகச்சேரி நீதிபதி ஒருவர் பரந்த மனப்பான்மையுடன் பயன்மிகு கருத்தைக்கூறி அரசியலாளர்களின் வரண்ட கருத்துக்களினால் உறைநிலையின்பாற்பட்டிருந்த தமிழ் மக்களையும், அரசியல்கைதிகளையும் புதிய கோணத்தில் சிந்திக்கவைத்துள்ளார்.

மேலும் மகசின் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகள் மாணவரின் அகாலச் சாவையிட்டு அகமிகவருந்தி இனிமேல் தமது விடுதலைக்காகப் பரிதாபகரமான நடவடிக்கையில் எவருமே ஈடுபடவேண்டாமெனப் பரிந்துரைத்திருப்பது மாணவனின் சாவில் அசாதாரணமான அரசியல் இலாபம் பெறும் தன்முனைப்போடு வடக்கில் ஒலிபெருக்கிகளோடு பவனிவந்துகொண்டிருக்கும் சம்பந்தன் போன்ற ஜீவகாருண்யம் சிறிதளவேனும் இல்லாத அரசியல்வாதிகளுக்குச் சிறந்த படிப்பினையாகவுமுள்ளது.

எனவே மகசின் சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப்போன்று ஏனைய சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல்கைதிகளும் மாணவன் செந்தூரனின் அகால மரணத்தையிட்டுக் கருத்து வெளியிட்டுத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாரின் கள்ளத்தனமும் கயமைத்தனமும் அம்பலத்துக்கு வருவதற்கு உறுதுணையாக விளங்கவும் வேண்டும்.

அத்தோடு சாவகச்சேரி நீதிபதியைப் போன்று வடக்கின் கல்வியாளர்களும், உயர் பதவியிலுள்ளோரும், மதகுருமார்களும் அறிவுரையும், ஆலோசனையும் வழங்கி இவ்வாறான பரிதாபகரமான நிகழ்வுகள் இனியும் இடம்பெறாமல் தடுத்து நிறுத்துவதோடு, விசாரணைகள் எதுவுமின்றி பயங்கரவாதிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நீண்டகாலமாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பில் நியாயமான வழிகளில் போராடுவதற்கான உணர்வையும் உடன் ஊட்டுவதற்குத் தயங்காமல் தயாராகவும் வேண்டும் வேண்டுமானால் வடபுலத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களதும், மாகாண சபைகளினதும், பிரதேச சபைகளினதும், தலைவர்களினதும், பிரதிநிதிகளினதும் தலைமையின் கீழும் வழிநடத்துதலின்பாலும் அடையாள உண்ணாவிரதம், வேலைப் புறக்கணிப்பு, கடை அடைப்பு, ஹர்த்தால் ஆகியவற்றையும் அவ்வவ்போது மேற்கொண்டுவருவது இயல்பின்பாற்பட்ட சாலவும் பொருத்தமானவொன்றாகவிருக்கும். முடிவாகக் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரனின் அவலச் சாவில் அரசியல் இலாபம் தேடும் அசிங்கமான நகர்வை வடக்கின் அரசியலாளர் உடனடியாகக் கைவிடுவதோடு இவ்விடயந்தொடர்பிலான தமது குறுமதியையும் விரிவுபடுத்திச் சீர்மிகு நீள்மதியாக்கவும் முன்வரவேண்டுமெனவும் வடக்கின் இளையோர் நலன் கருதி நாம் மிகவும் வினயமுடன் வேண்டவேண்டியவர்களாகவுமுள்ளோம்.



## தலைமன்னார் கடற்பரப்பில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

தலைமன்னார் கடற்பரப்பில் ஆண் ஒருவருடைய சடலம் உருகுலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை.(04) இலங்கை-இந்தியாவிற்கான எல்லைப் பகுதியில் தீடை என அழைக்கப்படும் மண் திட்டியில் குறித்த சடலம் கரை ஒதுங்கியுள்ளதை அடுத்து தலைமன்னார் கடற்படையினருடன் இணைந்து பொலிசார் மீட்டுள்ளனர். குறித்த சடலத்தின் கை பகுதியில் எச்.றுபினா என பச்சை குத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து சடலத்திற்குரிய நபர் தமிழக மீனவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன். அவர் யாகீர் உசைன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் இருந்து கடந்த மாதம் 28ம் திகதி கடற்றொழிலுக்கு சென்ற 04 தமிழக மீனவர்கள் காணாமல்போயிருந்த நிலையில் குறித்த சடலம் கரை ஒதுங்கியுள்ளது. வெள்ளிக்கிழமை மீட்கப்பட்ட குறித்த சடலத்தினை குறித்த தினம் இரவு 11 மணியளவில் பொலிசார் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். தற்பொழுது சடலம் மன்னார் பொதுவைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கிளிநொச்சியில் லஞ்ச, ஊழலுக்கு எதிராக விழிப்புணர்வு

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பிலான விழிப்புணர்வு செயற்திட்டம் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டது. இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மற்றும் கபே அமைப்பு ஆகியன இணைந்து இச்செயற்திட்டத்தினை முன்னெடுத்தனர். இலஞ்ச ஊழல் தொடர்பில் பொது மக்களை விழிப்பூட்டும் வகையில் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டதுடன், வாகனங்களில் மற்றும் கடைகளிலும் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

இச்செயற்திட்டம் 1.30 மணியளவில் கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஆரம்பமானது. இச்செயற்திட்டத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் ஆணையாளர் டயஸ் விக்கிரமசிங்க மற்றும் கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



விசுவமடு மகாவித்தியாலயத்தில் விசுவநாதம் எனும் நூல் வெளியீட்டு விழாவும் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலை அதிபர் அன்ரன் குலதாஸ் தலைமையில் இடம்பெற்றது. முன்னதாக விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டனர். இந்நிகழ்வின் சிறப்புரையினை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் நிகழ்தினார். அவர் தனது உரையில் சமுதாயத்தின் மனித வளங்களை உருவாக்குவது ஒவ்வொரு பாடசாலையின் கடமை. இந்த இடத்தில் உயர்ந்து நிற்பவர்கள் ஆசிரியர்கள். இந்த ஆசிரியர்கள் தான் சமுதாயத்தின் மனித வளங்களை உருவாக்குபவர்கள். ஒரு நாட்டின் முக்கியமான வளம். எது என்று கூறினால் அது மனித வளம் என்று தான் சொல்லலாம். இந்த மனித வளங்களை வைத்துக்கொண்டுதான் எத்தனையோ நாடுகள் வளர்ந்து நிக்கின்றன. நாம் ஒரு கொடிய யுத்தத்தின் மூலம் அடித்து உடைக்கப்பட்டு இந்த மண்ணில் விடப்பட்டவர்கள். நாம் நினைக்கின்றோம் அழிக்கப்பட்ட வளங்களை மீண்டும் எழுந்து வளர்த்துவர முடியாது என்று அப்படியல்ல? உலக மகாயுத்தத்தில் அழிக்கப்பட்ட யப்பான் நாடு கூட தொழில்நுட்பத்துடன் கூடிய கல்வி அறிவைப்பெற்று இன்று தொழில்நுட்பத்திலும் வளர்ந்த நாடாக மாறியுள்ளது. எமது மண்ணில் எமது வளங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. நாம் யாரிடமும் கையேந்திய இனம் அல்ல, கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டோம். ஆனாலும் எவரிடமும் கையேந்தாது எமது மனித வளத்தை பயன்படுத்தி முன்னேறவேண்டும். எமது மாணவர்களுக்கு ஏற்ற பயிற்சியினை, வளங்களைஅவர்களின்திசையில்நகர்த்த வேண்டியது ஒவ்வொரு ஆசிரியர்களின் கடமை. எமது நிலத்தில் எமது வளத்தில் எமது பலத்தில் முன்னேற அனைவரும் எமது மனித வளத்தை பயன்படுத்துவோம் எனத் தெரிவித்தார்.





## சம்பூரில் மீள்குடியேற்றப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைப்பு

சம்பூரில் விடுவிக்கப்பட்ட 818 ஏக்கர் காணிகளில் மீள்குடியேற்றப்பட்[illegible] கிழக்கு மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் நிதியின் கீழ் 105 துவிச்சக்கர வண்டிகள் கிழக்கு மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணி அவர்களால் வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு சேனையூர்மகாவித்தியாலயத்தில்வழங்கி வைக்கப்பட்டது. ஆண் மாணவர்களுக்கு 51 துவிச்சக்கரவண்டிகளும் பெண் மாணவர்களுக்கு 54 துவிச்சக்கரவண்டிகளுமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த பகுதியிலிருந்து சேனையூர் மகா வித்தியாலயம் மற்றும் சம்பூர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்கின்ற பாடசாலை மாணவர்களுக்கு, பாடசாலைக்கு சென்று வருவதற்கான துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விஜய், அஜித்தை வைத்து படம் இயக்க நினைக்கும் சங்கர்



தமிழ் சினிமா வரலாற்றில் மிகப்பெரிய ஆச்சரியம். தற்போது விஜய் நடித்த தெறி படம்சில மாதங்களில் வெளிவர உள்ளன. இதேபோல் அஜித்தின் வேதாளம் திரைப்படமும் கடந்த தீபாவளி அன்று வெளிவந்து மாபெரும் வரவேற்பு பெற்று திரையில் ஓடிக்கொண்டிருக்கிறது. இது தான் சரியான சந்தர்ப்பம்எனவேடைரக்டர் சங்கர், அவர்கள் அஜித் மற்றும் விஜய் வைத்து இயக்கவேண்டும் என வெகு நாட்களாக நினைத்து கொண்டிருக்கிறார். விஜய் 62 வது படம் மற்றும் அஜித் அடுத்த படம் அல்லது அதற்கு அடுத்த படம் சங்கர் இயக்க அதிகபட்ச வாய்ப்புகள் உள்ளன என தமிழ் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு விஜய், அஜித் தரப்பில் ஆதரவு வந்திருப்பதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனவே விஜய், அஜித் ரசிகர்களுக்கு மிகப்பெரிய விருந்து காத்து கொண்டிருக்கிறது.

## நீண்ட இடைவெளிக்கு பிறகு தமிழ் படத்தில் நமீதா



தமிழ் பட உலகில் முன்னணி நடிகையாக இருந்த நமீதா நீண்ட நாட்களாக தமிழ் பட வாய்ப்பு இல்லாமல் இருந்து வந்தார். சமீபத்தில் உடல் எடையை குறைத்த நமீதா மலையாள படம் ஒன்றில் மம்முட்டியுடன் நடித்து வருகிறார். தமிழ் படங்களில் நடிக்கவும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். இப்போது, பிரபு முக்கிய வேடத்தில் நடிக்கும் 'மீன் குழம்பும் மண் பானை யும்' படத்தில் நமீதாவுக்கு நடிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

இதில் வெளிநாட்டு பெண்ணாக வரும் நமீதா பின்னர் தமிழ்நாட்டுக்கு வந்து தமிழ் பாரம்பரியத்தின் பெருமைகளை உணர்ந்துதமிழ் கலாசாரத்தை நேசிப்பது போன்ற வேடத்தில் நடிக்கிறார். நீண்ட இடைவெளிக்குப்பிறகு தமிழ் படத்தில் நடிப்பதால் நமீதா மகிழ்ச்சியில் உள்ளார்.

## பிந்து மாதவியின் ஏக்கம்



எவ்வளவு தான் கடுமையாக உழைத்தாலும் முன்னணி இடத்தை பிடிக்கமுடியவில்லையே' என,ஏங்குகிறார் பிந்து மாதவி. அவரது ஏக்கத்தை புரிந்துகொண்ட சிலர், 'முன்னணி இடத்துக்கு வரவேண்டும்என்றால், பெரிய ஹீரோக்களுடனும், பெரிய பட்ஜெட் படங்களிலும் நடிக்க வேண்டும். துக்கடா வேடமாக இருந்தாலும், பெரிய பட்ஜெட் படங்களை ஓரங்கட்டக்கூடாது' என, ஆலோசனை கூறியுள்ளனர்.

இதையடுத்து, இதுவரை பின்பற்றி வந்த திரைப்பட கொள்கையை மாற்றியுள்ள பிந்துமாதவி, முன்னணி ஹீரோக்கள் மற்றும் பெரிய பட்ஜெட் படங்களுக்கு வலை வீசி வருகிறார்.

## திகில் படத்தில் நடிக்கும் நயன்தாரா



நயன்தாரா நடிப்பில் இந்த வருடம் 'மாயா', 'தனி ஒருவன்', 'நானும் ரவுடிதான்' ஆகிய படங்கள் வெளியானது. இப்படங்கள் வரிசையாக வெற்றிபெற்றன. இதனால் ஹாட்ரிக் நாயகி என்ற அந்தஸ்தை பெற்றிருக்கிறார். இதில் 'மாயா' திகில் படம். நாயகிக்கு முக்கியத்துவம் கொண்டு எடுக்கப்பட்ட இப்படத்தில் நயன்தாராவின் நடிப்பு அதிகம் பேசப்பட்டது.

தற்போது அதுபோல் ஒரு திகில் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார் நயன்தாரா. இப்படத்தை 'களவாணி', 'வாகை சூடவா', 'நய்யாண்டி', 'சண்டி வீரன்' படங்களை இயக்கிய சற்குணம் தயாரிக்கிறார். இவரின் உதவியாளர் தாஸ் ராமசாமி இயக்கவுள்ளார். விரைவில் இப்படம் குறித்த முழுவிபரங்கள் வெளியிட உள்ளனர். நயன்தாரா நடிப்பில் 'திருநாள்', 'இது நம்ம ஆளு' படங்கள் விரைவில் வெளியாகவுள்ளது

## கத்தி-2ம் பாகமா - முருகதாஸ் அதிரடி



இளைய தளபதி விஜய் நடிப்பில் மாபெரும் வெற்றி பெற்ற படம் கத்தி. இப்படத்தில் விவசாயிகள் பிரச்சினை குறித்து முருகதாஸ் கூறியிருந்தது அனைத்து சென்டர் ஆடியன்ஸை களையும் கவர்ந்தது.

இப்படத்தின் தெலுங்கு ரீமேக்கில் மகேஷ் பாபு நடிப்பதாக இருந்தது. ஆனால், அவர் நான் ரீமேக் படங்களில் நடிக்கமாட்டேன் என்று கூறி முருகதாஸ் கூறிய புதிய கதை ஒன்றில் நடிக்கவுள்ளாராம். இந்த கதை அப்படியே கத்தி படத்தின் சாயலிலேயே தான் இருக்குமாம். இன்னும் சொல்லப்போனால் விஜய்யை வைத்து இரண்டாம் பாகம் கூட எடுக்கலாமாம்.

---

கேப்டன் இஸ் பேக் இந்த வார்த்தையை கேட்டதும் தமிழக ரசிகர்களுக்கு செம்ம உற்சாகம். இந்நிலையில் அறிமுக இயக்குனர் அருண் இயக்கத்தில் கேப்டன் அவருடைய மகன் சண்முகபாண்டியன் நடிக்கும் படம் தமிழன் என்ற சொல். இப்படத்தைப்பற்றி சமீபத்தில் ஒருவார இதழக்கு பேட்டியளித்த இயக்குனர், 'நான் ரவிவர்மன், 'காக்கா முட்டை' மணிகண்டனிடம் உதவி ஒளிப்பதிவாளராக பணியாற்றியுள்ளேன், 200க்கு மேற்பட்ட விளம்பரப் படங்களை இயக்கியுள்ளேன்.

இது ஒரு குடும்பம் சார்ந்த திரைப்படம். கேப்டனும் படத்துல அரசியல் வசனம் எதுவும் வேணாம்னு தெளிவா சொல்லிட்டார். விஜய்க்கு 'செந்தூரபாண்டி' மாதிரி, சண்முக பாண்டியனுக்கு இந்தப் படம் இருக்கும். என கூறியுள்ளார்.

## குடிசை வாசிகளை நினைக்கும் போது கண்ணீர் வருகிறது - ஐஸ்வர்யா



அட்டகத்தி, சூதுகவ்வும், காக்கா மூட்டை படங்களில் கதாநாயகி யாக நடித்தவர் ஐஸ்வர்யா ராஜேஷ். இவர் சைதாப்பேட்டை குடிசைப்பகுதி வெள்ளத்தில் மூழ்கி இருப்பது குறித்து மிகுந்த மனவேதனை அடைந்துள்ளார். காக்காமுட்டை படத்தில் நான் நடிக்கும் போது டைரக்டர் மணிகண்டன் என்னை சைதாப்பேட்டை குடிசை பகுதியில் கொண்டுவிட்டார். அங்கேயே இருந்து அவர்களது வாழ்க்கையை அப்படியே தெரிந்து கொண்டேன். இதனால் நான் அந்த படத்தில் நான் சிறப்பாக நடிக்க முடிந்தது. சுமார் 60நாட்கள் அவர்களுடன் நான் வாழ்ந்து இருக்கிறேன்.

வெள்ளம், மழை இல்லாத நாட்களிலேயே அவர்ளை நினைத்து நான் கண்கலங்கி இருக்கிறேன். மையப்பகுதியான சைதாப்பேட்டையில் வாழும் இவர்களை பற்றி கூட யாரும் கவலைப்படவில்லையே என்று நினைத்து நான் வருந்தி இருக்கிறேன். ஒருமுறை அவர்களது வேதனையை பற்றி நான் பேசும்போது எனக்கு நிறைய மிரட்டல் வந்தது.' நீ நடிகை நடிப்பை மட்டும் பார்த்து விட்டு போ' என்று மிரட்டினார்கள். இப்போது அவர்கள் வாழும் இடம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்து இருக்கிறது. வீடுகளை இழந்து தவிக்கிறார்கள். அவர்கள் படும் வேதனைகளை நினைத்தால் கண்ணீர் வருகிறது. சாப்பிட கூட மனம் இல்லை. மிகவும் வருத்தமாக இருக்கிறது. இவர்களுக்கு விடிவு காலம் இல்லையா? இவ்வாறு அவர் கூறினார்.

## காஞ்சனா பாணியில் காந்தாரி



பேய் வேடங்களில் நடிக்க நடிகைகள் போட்டி போடும் சீசன் இது. நயன்தாரா முதல் த்ரிஷா வரை முன்னணி நடிகைகளே பேயாக நடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதோடு பேய் வேடங்களில் நடிக்கும் படங்களில் ரோப்பில் தொங்கியபடி ரிஸ்க் எடுத்து நடிக்க வேண்டும் என்றபோதும் அந்த மாதிரி படங்களே வெற்றி பெறுவதால் ஒவ்வொரு நடிகைக ளுமே பேய் கதைகளில் நடிக்க வேண்டும் என்றால் முதல் ஆளாக வந்து நிற்கிறார்கள். அந்த வகையில், ஏற்கனவே மாசாணி என்ற படத்தில் பேயாக நடித்தார் இனியா. அந்த படத்தை பத்மராஜா இயக்கியிருந்தார். நீண்ட இடைவேளைக்குப்பிறகு செந்தூரப்பூவே ராம்கி அப்படத்தில் ரீ-என்ட்ரி கொடுத்தார். படம் பெரிய வெற்றி இல்லை என்றாலும் சுமாரான வெற்றியடைந்த அந்த படத்தின் கதை இனி யாவை மையப்படுத்திதான் இருந்தது. முதலில் சாதாரண பெண்ணாக நடித்திருந்த அவர் பின்னர் கொலை செய்யப்பட்டு பேயாக வந்து பழிவாங்கும் கதை. அந்த படத்தை இயக்கிய பத்மராஜா இப்போது மாசாணியை விட இன்னும் பயங்கரமான ஒரு பேய் கதையை தற்போது யார் செய்துள்ளார்.

அந்த படத்திற்கு காந்தாரி என்று பெயர் வைத்திருப்பவர். அதில் இனியா நடித்தால்தான் சிறப்பாக இருக்கும் என்று அவரிடம் தற்போது கால்சீட் வாங்கியிருக்கிறார். இதுவும்பழிவாங்கும் பேய் கதைதான் என்றாலும், பழிவாங்குவது மிக புதுமையான முறையில் படமாக்கப்படுகிறதாம். கிட்டத்தட்ட காஞ்சனா பாணியில் இந்த காந்தாரி உருவாகிறதாம். இந்த படத்திற்காக இனியாவை எந்தமாதிரி கெட்டப்பில் நடிக்க வைக்கலாம் என்கிற ஆலோசனை தற்போது நடந்து'கொண்டிருக்கிறது.

## அரண்மனை-2 ஷூட்டிங் ஓவர்



அரண்மனை-2 படத்தின் ஷூட்டிங் முடிந்துவிட்டதாக நடிகை த்ரிஷா தெரிவித்துள்ளார். சுந்தர்.சி இயக்கத்தில், வினய், ஆன்ட்ரியா, லட்சுமி ராய் ஆகியோரது நடிப்பில் வெளியான சூப்பர் ஹிட் த்ரில்லர் படம் அரண்மனை. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து சுந்தர்.சி, அரண்மனை இரண்டாம் பாகத்தை ஆரம்பித்தார். சித்தார்த், த்ரிஷா, ஹன்சிகா, பூனம் பஜ்வா, சூரி, கோவை சரளா உள்ளிட்ட பலரது நடிப்பில் உருவான இப்படத்தின் ஷூட்டிங் கடந்த சில மாதங்களாக விறுவிறுப்பாக நடந்து வந்தது.

இந்நிலையில் இப்படத்தின் ஷூட்டிங் முடிந்துவிட்டதாக த்ரிஷா கூறியுள்ளார். இதுப்பற்றி த்ரிஷா மேலும் கூறியிருப்பதாவது அரண்மனை-2 ஷூட்டிங் முடிந்துள்ளது. ஆனால் படத்தை பார்க்க பொங்கல் வரை என்னால் காத்திருக்க முடியாது என்று கூறியிருக்கிறார். அரண்மனை-2 படத்தை தேனாண்டாள் பிலிம்ஸ் வெளியிட உள்ளது. இப்படம் பொங்கலுக்கு வெளி வர இருக்கிறது.

## டாம் குரூஸ் படத்திற்கு இசை ஏ.ஆர்.ரகுமான்



தமிழ் சினிமாவில் இருந்து ஹோலிவுட் வரை சென்று கலக்கியவர் ஏ.ஆர். ரகுமான். அதுமட்டுமன்றி இரண்டு ஒஸ்கர் விருதுகளை வென்று தமிழ் சினிமாவிற்கு பெருமை சேர்த்தார். இவருக்கு அடுத்து ஹோலிவுட் நடிகர் டோம் குரூஸ் படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பு அமைந்துள்ளது. மம்மி படத்தின் தொடர் பாகமாக 4வது பாகம் ரெடியாகவுள்ளது. இப்படத்தில் முந்தைய படத்தின் ஹீரோவிற்கு பதிலாக டாம் குரூஸ் நடிக்க கமிட் ஆகியுள்ளாராம். இப்படத்தை அலெக்ஸ் குர்ட்ஸ்மேன் இயக்கவுள்ளார். இவருடைய இயக்கத்தில் ஏற்கனவே ஒரு ஹோலிவுட் படத்திற்கு ரகுமான் இசையமைத்து குறிப்பிடத்தக்கது.

---

பாகுபலி படத்தின் வெற்றியை நாங்கள் சொல்லி தெரிய வேண்டியது இல்லை. 2 நாட்களில் ரூ.100 கோடி வசூல் செய்தது. இந்நிலையில் இப்படத்தின் இரண்டாம் பாகம் பிரமாண்டமாக தயாராகி வருகிறது. இப்படம் அடுத்த வருடம் வரும் என கூறப்படுகின்றது. பாகுபலி-2 ரிலீஸ் ஆகும் மாதத்தில் தான் அமீர் கானின் டங்கல் படமும் ரிலிஸாக வாய்ப்புள்ளதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றது. அந்த வகையில் அமீர் கானின் சினிமா மார்க்கெட் வைத்து பார்க்கையில் பாகுபலி-2 வசூல் பாதிப்படைய வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளனர். இதனால், பாகுபலி-2 படம் இன்னும் தள்ளிப்போக வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைப் பூங்கா




நேற்றைய இரவினில்
மெல்லக் கடக்கும்
பேருந்தொன்றின்
சன்னலோரத்திலிருந்து
யாரென்றறியா
மழலையொன்று
கையசைத்து
புன்னகைத்த கணம்
பஞ்சாய் பறந்திருந்தன
நெஞ்சில் செல்லரித்துப்போன
பல ரணங்கள் !!!

சோமம் குடித்ததுபோல்
சொரணைகெட்டுத் திரிகிறது
சில ஜென்மங்கள்
காமக் கடவுளவன்
கழுத்தைத் திருகி இருவரும்
எறிந்திருந்தால் என்ன ?
கருவறையைக்
கழிவறையில் இறக்கிவிட்டு
காமம் வேறு தேடி
பறந்து விட்டாலோ
அந்த கல் மனசுக்காரி ??
அன்னைக்கான இலக்கணத்தை
அடியோடு மாற்றிவிட்டவளின்
அடிவயிற்றிலிறங்கி மாதந்தோறும்
பீறிட்டுத் தெறிப்பது செங்குருதியா ??
இல்லை
சாக்கடைக்கழிவா ??

எத்தனை வெறி ..?
எத்தனை சினம் ..?
கீறிப்பிளந்தினும்
சீறிப்பாய்வதென்னமோ
செங்குருதிதானே...??
பின்
மதமெனும்
கட்டுக்குள்
முட்டி மோதி
திமிறி
வெறிகொண்டு
கொப்பளிக்கும்
கோபத்துடன்
எதிர்படும்
ஏமாளியை
வெட்டிச்சாய்த்து
குருதி தெறித்த
முகத்துடன்
ஆக்ரோஷமாய்
வானோக்கி
கர்ஜிப்பதையா
விரும்புகிறார்கள்
மேலுள்ள இவர்களின்
கடவுள்கள்





அங்கமெலாம்
தவழ்ந்தோடும்
வண்ணங்களுனை
அள்ளியெடுக்கத்
தூண்டுகிறது !!
திறந்து பார்க்க
துடிக்கிறேன்
உன் பக்கங்களை !!
முழுதும்
முகர்ந்து பார்க்கத்
துடிக்கிறேனுன்
மணங்களை !!
இக்கணம் தொடங்குகிறேன்
எப்போது முடிப்பேன்
என்பதை நானறியேன் !!
தலை முதல்
அடி வரை
விரல் கொண்டு
விளையாடுகிறேன் !!
கிள்ளி எடுத்ததால்
கசங்கிய உன் உடலை
விரல் கொண்டு
மீண்டும் கிள்ளுகிறேன் !!
திகட்டாத
தேன் சுவையைத்
தேடி அடைகிறேன் !!
மனம் முழுதும்
சுகங்கள் வழிந்தோட
மறு முறையுமுனைத்
தீண்டுகிறேன் !!
பசியும் தூக்கமும்
பஞ்சாய் பறந்திருந்தது
இக்கணம்
எண்ணங்கள் முழுதுமுன்
சடுகுடு ஆட்டங்கள்தான் !!
புன்னகையுடன்
உன்னிலிருந்து
என்னை விலக்குகிறேன் !!
இம்முறை
என் பசி
கொஞ்சம் அடங்கிடவே
ஆயிரத்தில் ஒன்றாய்
அலுமாரியில்
உனை வைக்கிறேன் !!!!

அதிகாலைப் பனிமழையில்
யாருமற்ற சாலையில்
காலார நடக்கையில்
எழுகின்றன அவை !!!
சில்லென்ற மழைச்சாரல்
ஜன்னல் கம்பிகளினூடே
தெறித்து மேல் விழுகையில்
தோன்றுகின்றன அவை !!!
கொஞ்சிப் பேசும் மழலையின்
கள்ளமில்லா
வெள்ளைச் சிரிப்பில்
உதிர்கின்றன அவை !!!
பாவாடை தாவணியில்
ஓர விழி கொஞ்சம் காட்டும்
ஒய்யாரமான ஓர் நடையழகில்
தெறிக்கின்றன அவை !!!
உயிரில் குழைந்து
விரல் வழி வெளிவரும்
அவற்றை
கவிதையென்பதா ?
கிறுக்கலென்பதா ?
என்பதை மட்டும்
யாமறியேன் !!!

நித்தமும் நான்
தேடி அலைவது
சத்தமில்லாமல்
உனைத் தீண்டிடத்தான் !!!
கொத்துக் கொத்தாய்ப்
பூத்திருந்து
மத்தளம் வாசிக்கிறாய்
மனதினுள்ளே !!!
இதழ்கள் சுவைத்து
இதமாய் உள்ளிழுக்கிறேன்
உன் தேன்சுவையை !!!
பருகிட மட்டும்தான்
பாவியிவன் வருகிறானென
பதறிவிடாதடி
செம்பூவே !!!
உன்மூச்சனைத்து
உயிர் வாழ்வதே
உன்னால்தானடி
என் பெண்பூவே !!!





இன்னும்
கனன்று கொண்டிருக்கிறது
நீ கூறிய வார்த்தைகள்
பொறியாய்த் தொடங்கி
பந்தமாய் உருவெடுத்து
எண்திசையும்
சுட்டெரிக்கிறது என்னை
ஆறுதலுக்காய்ப்
பலர் வரினும்
ஆற்றுப்படுத்த முடியவில்லை
அக்கனலினை
மொத்தமாய் எரிந்து
சாம்பலாய் ஆனபின்
கடல்தனில்
கரைத்து விடுவதால் மட்டும்
உன் சுடு சொல்
மறைந்திடுமா என்ன?
என்
கண்ணீர்த் துளிகளை
கரம் கொண்டு துடைத்துவிடடி
அது மட்டும் போதும்
என்னுயிர்த் தோழியே...

வாழ்வில்
வெற்றி பிடிக்குமா ?
தோல்வி பிடிக்குமா ?
என்கையில்
எது ஏற்படினும்
வாழ்வது பிடிக்குமென
முதல் பக்கத்திலேயே
மூடி வைத்துவிடுகிறேன்
அந்த
தன்னம்பிக்கைப் புத்தகத்தை !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப்பேரினவாதிகள் எவ்வாறெல்லாம் ஏமாற்றுவார்கள் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குத் தெரிந்த உண்மை சுமந்திரனுக்குத் தெரியவில்லையா?



"தமிழ் மக்களிடம் கூறவேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குறுதிகளை வழங்கும் அரசு, அவற்றை நிறைவேற்றாமல் ஏமாற்றி எமது மக்களிடமிருந்து எம்மைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி கைதேர்ந்தது" என்று சபையில் கடும் அதிருப்தியுடனும், ஆவேசத்துடனும் அரசின் மீது குற்றஞ்சாட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இது கடந்த அரசைவிட மோசமான நிலை என்றும் சுட்டிக்காட்டினார். நாம் எமது பொறுமை யைக் கடந்துவிட்டோம். இருப்பினும், அதை இன்னும் நீடிக்க விரும்புகின்றோம்.

இந்தப் பொன்னான வாய்ப்பை அரசு கைநழுவக்கூடாது என்றும் அரசுக்கு இடித்துரைத்தார். நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட விபரங்களைக் குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவிக்கையில், "தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து கூறிப்பிடவேண்டும். நீதி அமைச்சருடன் நானும், எமது கட்சித்தலைவரும் நடத்திய கலந்துரையாடலில் எமக்கு வாக்குறுதி வழங்கப்பட்டது. நீதி அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி ஆகியோருக்கிடையில் தொலைபேசியூடாக கலந்துரையாடல் இடம்பெற்றது. இதற்கமைய ஒக்டோபர் 31ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நவம்பர் 7ஆம் திகதிக்குள் அரசியல் கைதிகளின் விடுதலை நிறைவுபெறும் என ஜனாதிபதியால் கூறப்பட்டது. ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியால், அதை நாம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட அரசியல் கைதிகளிடம் சென்று தெரிவித்தோம். அதன் பின்னர் அவர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். இருப்பினும், ஒக்டோபர் 31ஆம் திகதி எவரும் விடுதலைசெய்யப்படவில்லை.

இதையடுத்து, நவம்பர் 5இல் பிரதமர் தலைமையில் நாடாளுமன்றத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இந்த வாரத்துக்குள் இறுதிக் கைதிகள் விடுவிக்கப்படுவதாக இதன்போது இணக்கம் காணப்பட்டது. இவ்வாறாக இந்தச் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டது. காரணம் என்ன? 99 கைதிகள் புனர்வாழ்வுக்கு இணக்கம் தெரிவித்தனர். அவர்கள் முழுமனதுடன் இந்தப் புனர்வாழ்வுக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

இப்படியாவது விடுதலை கிடைக்கும் என்ற ஏக்கத்தில்தான் அவர்கள் இணங்கினர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் பொலிஸார் பிடிக்கின்றனர், அடிக்கின்றனர் ஒப்புதல் வாக்குமூலம் பெறுகின்றனர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கின்றனர். கடந்த புதன்கிழமை 20 பேர் விடுதலை செய்யப்பட்டிருக்கவேண்டும். இவர்கள் புனர்வாழ்வுக்கு கோரிக்கை விடுத்தவர்கள். ஆனால், 10 நாட்களின் பின்னர் இந்த 20 பேரில் ஒருவர் மட்டுமே புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

10 நாட்களின் பின்னர்தான் இது நடந்தது. அதாவது, புனர்வாழ்வுக்கான உங்களது முதல் குழுவில் ஒருவர்தான் விடுதலைசெய்யப்பட்டுள்ளார். ஒரு குழுவில் ஒருவர். இதனை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? இந்த நிலைமையில்தான் 18 வயது மாண வன் செந்தூரன்கைதிகளை விடுதலைசெய்ய வேண்டுமெனக்கோரி தற்கொலை செய்துகொண்டார். இவர்களை விடுதலைசெய்யவேண்டும்என்றுகடந்த 6 ஆண்டுகளில் எவரும் கேட்கவில்லை. கடந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை. அதனால் கேட்கவில்லை. ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தாலும் எதுவும் நடக்காது என்று தெரியும். ஆனால், இந்த அரசு மீது நம்பிக்கை உள்ளது. அதனால்தான் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றது. இருப்பினும், அரசு வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டது. இவ்வாறான நிலையிலேயே வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக நாம் வாக்களித்தோம். இந்த அரசு வாக்குறுதிகளை வழங்குகிறது. ஆனால், அவற்றை நிறைவேற்றவில்லை. இப்படியிருக்கையில், ஏன் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தீர்கள் என்று மக்கள் கேட்கின்றனர் விமர்சிக்கின்றனர்.

அரசியல் இடரை நாம் எதிர்நோக்குகின்றோம். எமது மக்களின் இடரை நாம் தீர்க்கவேண்டும். இந்த அரசின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது எமது பொறுமையை நாம் தாண்டிவிட்டோமோ என்று சந்தேகம் ஏற்படுகின்றது. ஒரு குழு வில் ஒரே ஒருவர் மட்டுமே புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டுள்ளர். இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இருப்பினும், நாம் எமது பொறுமையை இன்னும் நீடிக்க விரும்புகின்றோம். இது ஒரு பொன்னான வாய்ப்பு. இது கைநழுவிச் செல்ல அரசு விடக்கூடாது. கடந்த அரசு இதுபோன்ற வாக்குறுதிகளை வழங்கவில்லை. ஆனால், நீங்கள் வாக்குறுதி தருகின்றீர்கள். அவை பொய்யான வாக்குறுதிகள். நீங்கள் எங்களை ஏமாற்றுகிறீர்கள். இது அதை விட மோசமான விடயம். இதுதான் உங்களின் உண்மையான நிலையா? இது மக்களின் பிரதிநிதிகளை மக்களிடமிருந்து வேறாக்கச்செய்யும் முயற்சியாகும். நீங்கள் எங்களிடம் வாக்குறுதிகளை வழங்குகிறீர்கள். அந்த வாக்குறுதிகளை எமது மக்களிடம் போய் நாம் சொல்லவேண்டும் என்று நினைக்கின்றீர்கள். ஆனால், அதை நிறைவேற்றுவதில்லை. எங்களை ஏமாற்றுகிறீர்கள். இது எமது மக்களிடமிருந்து எம்மைப்பிரிக்க மேற்கொள்ளும் முயற்சியாகும். ஐக்கிய தேசியக் கட்சி இதில் கைதேர்ந்தது என்பது எமக்குத் தெரியும்" என்றார்.

இதேவேளை, இராணுவம் குறித்து கருத்து வெளியிட்ட அவர், "யுத்தத்தின் பின்னரும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இவர்கள் 35, 40 வயதை அடையும்போது ஏதாவது ஒரு நல்ல தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்து இராணுவ சூழ் நிலையிலிருந்து அவர்களை விடுவித்து குடியியல் வாழ்வுடன் இணைக்கலாம். அது அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் நன்மையாக அமையும். இதற்காக அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா?" என்றார். மேலும் வடக்கு, கிழக்கில் நீதிமன்றங்களில் தமிழ் நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும், உயர்நீதிமன்றத்திலும் தமிழ் நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார். இத்தனையும் தெரிந்த சுமந்திரனுக்கு காலகாலமாய் அரசினது ஏமாற்றும் செயற்பாடுகளை முதலமைச்சர் விக்னேஸ்வரன் புரிந்துகொண்டதைப்போல நீங்கள் புரிந்துகொள்ளவில்லையா?

02ஆம் பக்கத் தொடர்ச்சி...

சர்வாதிகார நாடுகள் தங்களுடைய நாட்டிற்கு பயங்கரவாதிகளினால் அழிவும், உயிர்ச்சேதமும் ஏற்படுத்தப்படுகின்றபோது மாத்திரமே.

அவர்கள் பேசுகின்றார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அந்நாடுகளில் இறந்ததற்கு நாடுவிட்டு நாடுசென்று ரஷ்யா, பிரித்தானியா போன்ற நாடுகள் தாக்குதல்களை நடாத்துகின்றது. இரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டதற்கு இந்நாடுகள் எடுத்த நடவடிக்கை என்ன? இந்நாடுகளும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவான செயற்பாடுகளையே மேற்கொண்டு வந்திருக்கின்றன. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியும் கூட இவ்வாறே கவிழ்க்கப்பட்டு புதிய ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. சீனாவினது தலையீடு இலங்கையில் அதிகரித்ததன் விளைவாகவே அதனை பொறுத்துக்கொள்ள முடியாத அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் மஹிந்தவின் ஆட்சியை இல்லாதொழிக்கத் தீர்மானித்து செயற்படுத்தியது. வடமாகாணசபையின் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற நோக்கில் விக்னேஸ்வரன் அவர்கள் களமிறக்கப்பட்டார். வானத்தால் போன சனியனை ஏணிவைத்து இறக்கிய பழமொழியினைப்போன்று சம்பந்தனும், சுமந்திரனும் முதலமைச்சர் விடயத்தில் செயற்பட்டனர். இன்று அவரை முதலமைச்சர் பதவியிலிருந்து தூக்கியெறிவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ரணிலோடு இணைந்து மேற்கொண்டு வருகின்றனர் என்பது கவலைக்குரியவிடயமே. ஊடகங்களுக்கு பதிலளிக்கையில் எமக்குள் பிரிவினை இல்லை எனக்கூறிக்கொள்ளும் கூட்டமைப்பினர் ஏன் இதுவரை விக்னேஸ்வரன் அவர்களைச் சந்தித்து ஒற்றுமையாக செயற்படுவதற்கு வழிவகைகளை ஏற்படுத்தக்கூடாது. இவற்றை வெளிச்சம் போட்டுக்காட்டுவதில் விக்னேஸ்வரனுக்கும், சுமந்திரனுக்கும் கிடைக்கும் இலாபம் என்ன? கட்சிக்கும், மாகாணசபைக்கும் இடையில் பிரச்சினைகள் இல்லையெனில் சம்பந்தன் தலைமையில் ஒரு கலந்தாலோசிப்பு ஒன்றினை மேற்கொண்டு அதனை சீர்படுத்திக் கொள்ளமுடியுமல்லவா.

இதனைவிடுத்து அரசாங்கம் அதனைத்தருகின்றது. இதனைத் தருகின்றது என்பதற்காக இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெறவில்லை என்று கூறிவிடமுடியாது. குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு அரசின் அடிவருடிகளைத்தவிர வேறு யாரும் விரும்பமாட்டார்கள் என்பதே உண்மைத்தன்மையாகும். இனப்படுகொலையினை மூடிமறைப்பதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை பகடைக்காயாக அரசு பயன்படுத்தி வருகின்றது என்பது கவலையளிக்கின்றது. இதனை சீர்படுத்த தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் என்ன என்பது கேள்விக்குறியாகவிருக்கின்றது.

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

இதற்கு உடனடித்தீர்வாக விக்னேஸ்வரனை அழைத்து பேச்சுக்களை நடாத்தவேண்டும் அல்லது குழப்பவாதிகளைக் கட்சியிலிருந்து நீக்கவேண்டும். ஒட்டுமொத்த தமிழினமும் பாதிக்கப்படக்கூடாது. நன்கு ஆராயப்பட்டு அடுத்த தலை வர் யார் என்கின்ற தீர்மானம் எடுக்கப்படவேண்டும். தன்னை உத்தமர்கள் எனக்காட்டுவதற்காக மக்களோடு மக்களாக இணைந்து செயற்படும் பலர், தமது சுய இலாப அரசியல் நிறைவடைந்தவுடன் நீ யாரோ நான் யாரோ என இருந்துவிடுவார்கள். இலங்கையில் அரசியல் மாற்றம் ஒன்று தேவை. அதற்காக ஒட்டுமொத்த தமிழினமும் பலிக்கடாவாகும் செயற்பாடாக அமைந்துவிடக்கூடாது என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும். அதாவது தலைமைக்கானப் போட்டியைவிடுத்து தமிழ்மக்களுக்கான நிரந்தரத் தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தமிழ்த்தரப்பினர் செயற்படுவார்களாகவிருந்தால் அதுவே தமிழ் மக்களுக்கான சிறந்த தீர்வாக அமையும் எனலாம்.

மலையகத்தில் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்களை கண்டித்தும் மக்களுக்கு தெளிவுறுத்தும் வகையில் பொகவந்தலாவ கெம்பியன் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கபட்டது. மலையகத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடாது எனவும் சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்குபவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்குமாறு கோரியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுவர்கள் கோஷம் வெளியிட்டனர்.

இதேவேளை மக்களிடம் வாக்குகளைப்பெற்று பாராளுமன்றம் செல்லும் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திற்கு சென்று மௌனம் காக்காமல் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான கடுமையானசட்டதிட்டங்களை அமுல்படுத்துமாறு பாராளுமன்றத்தில் அழுத்தத்தை தெரிவிக்க வேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறுவர்கள் மேலும் தெரிவித்தனர். இந்த தெளிவூட்டும் ஆர்ப்பாட்டத்தில் சுமார் 150கும் மேற்பட்ட சிறுவர்கள் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டம் பொகவந்தலாவ கெம்பியன் தோட்ட வைத்தியசாலையில் இருந்து கெம்பியன் நகர்வரை பதாகைகளை ஏந்தி பேரணியாக சென்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை கெம்பியன் தோட்ட வைத்தியசாலையில் சிறுவர்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள் குறித்து சிறுவர்களை தெளிவூட்டும் செயலமர்வு ஒன்று பொகவந்தலாவ பொலிஸாரால் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆன்மீக உலகம்



## விவேகானந்தரின் சிந்தனைகள்

அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக்கொண்டு வந்தே தீரும். அமைதியையும் ஆசியையும் கொண்டுவராத அன்புச்செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை. கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம். உயிர்கள். அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார். இயற்கையை வெல்வதற்கே மனிதன் பிறந்திருக்கிறான். அதற்குப்பணிந்து போவதற்காக அல்ல.

இங்கேயே. இப்போதே நிறைநிலையை அடைய முடியாதென்றால் வேறெந்த மறுவாழ்க்கையிலும் அடைவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. பாவம், புண்ணியம் என்று எதுவும் இல்லை. நம்மிடம் உள்ளதெல்லாம் அறியாமை மட்டுமே. கடவுளை உணர்வதால் அறியாமை விலகுகிறது.

முதலில் நீ செல்ல வேண்டிய பாதையைக் கண்டுபிடி. அதன்பிறகு செய்யவேண்டியது எதுவும் இல்லை. கைகளைக் குவித்தபடியே கடவுளைச் சரணடைந்துவிடு. பாதையின் போக்கிலேயே இலட்சியத்தை அடைந்து விடுவாய். ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்து கொண்டே இரு. ஆனால். செய்யும் வேலையில் நீ கட்டுப்பட்டுவிடாதே. அதற்குள் சிக்கிக்கொள்ளாதே. இதுதான் கீதையின் வழி. எழுந்திருங்கள். எழுந்திருங்கள். நீண்ட இரவு கழிந்துவிட்டது. பகல்பொழுது நெருங்கிக்கொண்டிருக்கிறது. என் அன்பான இளைஞர்களே! உங்களுக்கு வேண்டுவதெல்லாம் உற்சாகம். உற்சாகம் மட்டுமே. சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒருவர் இல்லாதிருக்கும் போது அவரைப் பற்றி. பிறர் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள்.

மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பது கூட சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமக்கு தந்துவிடும். வாழ்க்கை என்னும் போர்க்களத்தில். அஞ்சாது எதிர்த்து நிற்கும் வெற்றி வீரன் ஒருவனுடைய மனநிலையே இப்போது நமக்கு தேவை.

மரணம் என்பது நமக்கு உறுதியாக ஒருநாள் வந்தே தீரும். அதற்குள் சிறிதளவாவது பிறருக்கு பயன்பட்டு அழிந்து போவது நல்லது. கோழைகளுடனோ அல்லது பொ[illegible] அரசியலுடனோ எந்தவிதத் தொடர்பும் எனக்கு இல்லை. கடவுளும் உண்மையும் தான் உலகிலுள்ள ஒரே அரசியல். மற்றவை எல்லாம் வெறும் குப்பை. அன்பின் மூலமாகச் செயற்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக்கொண்டு வந்தே தீரும்.

## நபிமொழிகள்

நிச்சயமாக உங்களுடைய பொருட்களும். உங்களுடைய மக்களும் (உங்களுக்குச்) சோதனையாடிருக்கும் என்பதையும் நிச்சயமாக அல்லாஹ் - அவனிடத்தில்தான் மகத்தான (நற்) கூலி இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். (குர்ஆன் 8:28) வானங்களில் உள்ளவை. பூமியில் உள்ளவை அனைத்தையும் தன் புறத்திலிருந்து உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்துள்ளான் நிச்சயமாக இதில் சிந்திக்கின்ற கூட்டத்தாருக்கு உறுதியான பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (குர்ஆன் 45:13) மு.ஃமின்களே! அல்லாஹ்வை நீங்கள் அஞ்சி நடந்து கொள்வீர்களானால், உங்களுக்கு (நன்மை-தீமையைப்) பகுத்தறியும் தன்மையை அவன் அளித்து. உங்களுடைய தீமைகளை உங்களைவிட்டும் அகற்றி. இன்னும் உங்க(ளுடைய பாவங்க)ளை மன்னிப்பான் (ஏனெனில்) அல்லாஹ் மகத்தான கருணை உடையவன். (குர்ஆன் 8:29) நிச்சயமாக மனிதன் அவசரக் காரனாகப் படைக்கப்பட்டுள்ளான். ஒரு தீங்கு அவனைத் தொட்டுவிட்டால் பதறுகிறவனாகவும் உள்ளான். (குர்ஆன் 70:19,20) நிச்சயமாக எவர்கள் அநியாயமாக அநாதைகளின் பொருட்களைத் தின்கிறார்களோ அவர்கள் தங்களின் வயிறுகளில் நெருப்பையே தின்(று நிரப்பு)கிறார்கள் பின்னர் அவர்கள் கொளுந்து விட்டெரியும் நரக நெருப்பில்தான் நுழைவார்கள். (குர்ஆன் 4:10) மேலும் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடம்) நீங்கள் உதவி தேடுங்கள் நிச்சயமாக அ(த் தொழுகையான)து உள்ளச்சம் உள்ளவர்க்கேயன்றி (மற்றவருக்குப்) பெரும் பாரமாகவே இருக்கும். (குர்ஆன் 2:45) (மு.ஃமின்களே!) ஓரளவு பயத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள். கனிவர்க்கங்கள் (விளைச்சல்கள்) ஆகியவற்றின் நஷ்டத்தாலும் திண்ணமாக நாம் உங்களைச் சோதிப்போம் (நபியே! இச்சோதனைகளில்) பொறுமையாளர்களுக்கு (சுவனத்தைக்கொண்டு) நீர் நன்மாராயங் கூறுவீராக! (குர்ஆன் 2:155) உங்களில் ஒருவர் தொழுகைக்காகக் காத்திருக்கும் நேரமெல்லாம் தொழுகையிலேயே அவர் இருக்கிறார். மேலும் அவர் தொழுகை முடிந்து எழாதிருக்கும் வரை அல்லது அவரது உளு முறியாமலிருக்கும்வரை. வானவர்கள். "இறைவா! இவரை மன்னித்து இவருக்குக் கருணை புரிவாயாக!" என்று பிரார்த்தனை செய்கின்றார்கள். (புகாரி) அல்லாஹ் தான் நாடியவருக்கு உணவை (சம்பத்தை) விரிவாக்குகிறான் தான் நாடியவருக்கு (அதனைச்) சுருக்குகிறான் உலக வாழ்வைக்கொண்டு அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். உலக வாழ்க்கையோ மறுமைக்கு (ஒப்பிடும் போது, அதன்) முன்னே. அற்ப சுகமே தவிர (வேறு) இல்லை. (குர்ஆன் 13:26) உங்களுக்கு வேதனை வருவதற்கு முன்னமே உங்களுடைய ரப்பின்பால் நீங்கள் திரும்பிவிடுங்கள் அவனுக்கு நீங்கள் முற்றிலும் பணிந்து விடுங்கள் (வேதனை வந்தால்) பிறகு நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள். (குர்ஆன் 39:54) தொழுகையை விடுவது மனிதனைக் கு.ஃப்ரில் சேர்த்து விடுகிறது. தொழுகையை விடுவதே மனிதனையும். கு.ஃப்ரையும் ஒன்று சேர்க்கிறது. தொழுகை ஈமானையும் கு.ஃப்ரையும் வேறுபடுத்திக் காட்டுகிறது. (தர்.ஃகீப்) "மனிதருக்கும் இணைவைப்பதற்கும் இடையில் தொழுகையைக் கைவிடுவதுதான் பிரித்தறிவிப்பது ஆகும்" என்று. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார். (முஸ்லிம். அபூதாவூத். திர்மிதீ).

## ஏசாயா

அப்பொழுது கர்த்தர் ஏசாயாவை நோக்கி நீயும் உன் மகன் சேயார்யாசூபுமாக வண்ணார் துறைவழியிலுள்ள மேற்குளத்து மதகின் கடைசி மட்டும் ஆகாசுக்கு எதிர்கொண்டு போய்.

நீ அவனை நோக்கி சீரியர் எப்பிராயீமோடும் ரெமலியாவின் மகனோடும் உனக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணி.

நாம் யூதாவுக்கு விரோதமாய்ப்போய் அதை நெருக்கி அதை நமக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு அதற்குத் தபேயாலின் குமாரனை ராஜாவாக ஏற்படுத்துவோம் என்று சொன்னதினிமித்தம்.

நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப்பார். இந்த இரண்டு புகையிற கொள்ளிக்கட்டைகளாகிய சீரியரோட வந்த ரேத்சீனும் ரெமலியாவின் மகனும் கொண்ட உக்கிரக்கோபத்தினிமித்தம் உன் இருதயம் துவள வேண்டாம்.

கர்த்தராகிய ஆண்டவர் அந்த ஆலோசனை நிலைநிற்பதில்லை. அதின்படி சம்பவிப்பதுமில்லை.

சீரியாவின் தலை தமஸ்கு தமஸ்குவின் தலை ரேத்சீன் இன்னும் அறுபத்தைந்து வருஷங்களிலே எப்பிராயீம் ஒரு ஜனமாயிராதபடிக்கு நொறுங்குண்டுபோம்.

எப்பிராயீமின் தலை சமாரியா சமாரியாவின் தலை ரெமலியாவின் மகன் நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெறமாட்டீர்கள் என்று சொல் என்றார்.

பின்னும் கர்த்தர் ஆகாசை நோக்கி நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள். அதை ஆழத்திலிருந்தாகிலும் உன்னதத்திலிருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள் என்று சொன்னார்.

ஆகாசோ நான் கேட்கமாட்டேன். நான் கர்த்தரைப் பரீட்சை செய்யமாட்டேன் என்றான். அப்பொழுது ஏசாயா தாவீதின் வம்சத்தாரோ கேளுங்கள். நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது போதாதென்று என் தேவனையும் விசனப்படுத்தப் பார்க்கிறீர்களோ?

ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.

தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொள்ள அறியும் வயது மட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார்.

அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும். நன்மையைத் தெரிந்துகொள்ளவும் அறிகிறதற்குமுன்னே நீ அருவருக்கிற தேசம் அதின் இரண்டு ராஜாக்களால் விட்டுவிடப்படும்.

07ஆம் பக்கத்தொடர்ச்சி...

நான் முள்ளிவாய்க்காலின் ஒரு குழந்தையாகவே உருவாக்கம் கண்டேன். நான் அரசியலுக்கு வந்த வழியே அது தான். இந்த அடிப்படையில் நான் உலகெங்கும் பரந்துவாழும் தமிழர்களுக்குச் சொல்லக்கூடியது செய்தியும் அதை ஒட்டியதே. ஈழத்தமிழர் விடயத்தில் இலங்கைத் தீவில இருக்கும் தமிழர்களை விடவும் கூடிய உரிமையோடு செயற்படும் அதிகாரத்தை முள்ளிவாய்க்கால் உலகத் தமிழர்களுக்கு வழங்கி ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டது. இலங்கைத் தீவின் பாராளுமன்ற அரசியலோ. வாக்குகளோ எமது அரசியலைத் தீர்மானிக்கும் சக்திகள் அல்ல. இவையெல்லாம் எமது குரலை ஏதோ ஒரு அளவுக்கேனும் உள்ளேயும் வெளியேயும் வெளிப்படுத்தும் ஒரு சில வழிமுறைகளே.

இதை ஓரளவுக்கு நான் அங்கம் வகிக்கும் வடமாகாண சபை இன அழிப்புத் தீர்மானம் மூலம் நிறைவேற்றியதன் ஊடாகத் தனது கடமையை செய்திருக்கிறது. இதைச் செய்தமையால். இன்று சர்வதேச அரசியலில் இருக்கும் அரச சக்திகளின் பிரதிநிதிகள் எம்மிடம் வந்து முரண்படும் தொனியில் கதைக்கிறார்கள். அவர்களுக்கு எமது முதலமைச்சர் நிதானமாகவும். சாந்தமாகவும். ஆழமாகவும் பதில் சொல்லிவருகிறார். வடமாகாண சபை கொண்டுவந்த தீர்மானத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை இன்று நாம் மேலும்தெளிவாகப்புரிந்துகொள்கிறோம். அதை நிறைவேற்றுவதற்காகச் செயற்பட்ட உந்துசக்திகளில் ஒன்றாக நானும் இருந்திருக்கிறேன் என்பது எனக்கு அடிமனதில் ஒரு திருப்தியைத் தந்திருக்கிறது. இது நாம் செய்யவேண்டிய வேலையின் ஒரு சிறு பகுதியே. இன்னும் நிறைய இருக்கிறது. அதன் தார்மீகப் பலம் எமது உலகளாவிய தன்மை ஒன்றுதான்.

**கேள்வி:-** ஆனால். தமிழ் அரசியலின் தலைமையில் இருப்போர் உங்களுக்கு மாறான கருத்தையல்லவா கொண்டிருக்கிறார்கள்?

**பதில்:-** நான்மாகாணசபையில்பெருமளவு வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டேன். எனது தலைமை முதலமைச்சர். அவர் தெளிவாகவே இருக்கிறார். ஆகவே தெளிவில்லாதவர்கள் வேறெங்கும் இருந்தால் அதற்கு நான் பொறுப்பாளியல்ல. பாராளுமன்றத்திற்குள் இருப்பவர்கள் தெளிவற்ற செயற்பாட்டில் இருந்தால் அதற்கு பாராளுமன்றத்தில் இருக்கும் ஒவ்வொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் பொறுப்பாளி. எமக்கு முன்னால் இருக்கும் பாரிய பொறுப்பை சரியான முறையில் எடுத்துச்செல்லத் தெரியாதவர்களாக யாரேனும் இருந்தால் கூட பரவாயில்லை. குந்தகம் விளைவிப்போராக அவர்கள் தொழிற்படுவதுதான் கவலைக்குரியது. யாராய் இருந்தாலும் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்றுவிட்டு அதற்கு எதிராகச் செயற்படுவார்களானால். அவர்களின் உண்மை முகம் மக்களுக்குத் தெரியவரும்போது அவர்கள் தோற்றுப்போவார்கள். இன்று அப்படியானவர்கள் தெளிவாகவே தம்மை அடையாளம் காட்டிவருகிறார்கள். பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபடுவான் என்பதைப்போன்றது தான் இவர்களின் நிலை.

**கேள்வி:-** அரசியலில் ஈடுபட்டிருப்பவராக அன்றி. தனிப்பட்ட அனந்தியாக உங்கள் உள்ளிருக்கும் உணர்வு என்ன?

**பதில்:-** இன அழிப்புக்கான நீதி கோராமல் நான் ஓயப்போவதில்லை. எனது கணவரை என் கண் முன்னால் பறிகொடுத்து இன்றும் அவரைநானும்என்பிள்ளைகளும் தேடிக்கொண்டிருக்கிறோம். அவர் ஒரு அரசியல் தலைவராக இருந்தவர். பலராலும் மதிக்கப்பட்டவர். அவரின் வாழ்வின் அர்த்தத்திற்குக் களங்கம் விளைவிக்க உலகின் எந்தச் சக்தி முயன்றாலும் அதை எதிர்கொள்ளும் மனத்துணிவை எனக்கு முள்ளிவாய்க்கால் தந்திருக்கிறது. எனது உணர்வின் மூச்சே என்னைச் செயற்பட வைக்கிறது. நான் உரிமைகளைக் காற்றில் பறக்கவிட்டு வாய்ப்புக்களைத் தேடும் ஒரு சாதாரண அரசியல்வாதி அல்ல. எனது உணர்வே என்னை வழிநடத்துகிறது. தேவை ஏற்படும்போதெல்லாம் வேண்டிய அரசியலை நான் படித்துக்கொள்ளலாம். அதற்கு உலகளாவிய தமிழ்ச் சமூகம் எனக்குத் துணையிருக்கும் என்ற துணிவு எனக்கு இருக்கிறது. தனிப்பட்ட யாரையும் நம்பி நான் அரசியலுக்குள் வரவில்லை.

**கேள்வி:-** இன அழிப்புக் குறித்த சர்வதேச விசாரணையை நோக்கிய அடுத்த நகர்வு என்னவாக இருக்க முடியும்?


**பதில்:-** சர்வதேச விசாரணை குறித்து எமது அடுத்த நகர்வுகளை வடிவமைக்க உலகளாவிய தமிழ்ச் சமூகத்தின் சட்ட வல்லுநர்களை, குறிப்பாக புதிய தலைமுறையிலிருந்து உருவாகியுள்ள சர்வதேச நீதி குறித்த அறிவையும், பூகோள அரசியல் சூட்சுமங்களை விளங்கிக்கொள்ளக்கூடிய ஆற்றலுள்ள புதிய தலைமுறைச் சிந்தனையாளர்களையும். செயற்பாட்டாளர்களையும் ஓரணியில் திரளச் செய்யவேண்டியதே எமது அடுத்த [illegible] வேண்டும். ஏனென்றால் [illegible] இல்லாத ஒரு மனித நாகரிகத்தின் குழந்தைகளான நாம். பல அரசுகளும் இணைந்துகொண்டு எமக்கெதிராக நடாத்தி முடித்த. தொடர்ந்தும் நடாத்திவரும் அநீதியை சர்வதேசப் பொறிமுறைகளூடாக மாற்றவேண்டுமானால். அதற்கேற்ற திறமைசாலிகள் எம்மிடையே அணிவகுக்கவேண்டும். இது ஒரு புதிய விதமான அணிவகுப்பு. இதற்குப் புதிய சுவாசம் தேவை. அந்தச் சுவாசத்திற்காக நாம் அர்த்தமான முறையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நேர்காணல் :- மறவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியல் உலகம்




## நீடித்து உழைக்கக்கூடிய சோடியம் அயன் மின்கலம் கண்டுபிடிப்பு




சம காலத்தில் மொபைல் சாதனங்கள் உட்பட பல்வேறு சாதனங்களிலும் இலித்தியம் அயன் மின்கலங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சோடியம் அயனைக்கொண்ட மின்கலத்தினை பிரான்ஸிலுள்ள விஞ்ஞானிகள் குழு ஒன்று முதன்முறையாக உருவாக்கியுள்ளது. இதனை லெப்டொப்களிலும், LED Flash மின்கலங்களை ஒளிர வைப்பதற்கும், Tesla Model S கார்களிலும் பயன்படுத்தக்கூடிய மின்கல மாதிரியினை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்து பாவனை செய்யக்கூடியதாகவும். இவ்வாறு சார்ஜ் செய்யும்போது ஒரு எலக்ட்ரோட்டிலுள்ள அயன்கள் மற்றைய எலக்ட்ரோட்டிற்கு திரவம் ஒன்றின் ஊடாக பயணம் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது.

## Nintendo அறிமுகம் செய்யும் அட்டகாசமான ஹேம்



வீடியோ ஹேம் வடிவமைப்பு நிறுவனமான Nintendo அடுத்த மாதம் புத்தம் புதிய வீடியோ ஹேம் ஒன்றினை அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ [illegible]வித்தலை விடுத்துள்ளது. Fast Racing NEO எனும் இக்ஹேமானது முன்னைய ரேசிங் ஹேம்களை விடவும் வேகமாக செயற்படக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்ஹேம் தொடர்பான ட்ரைலர் ஒன்று வெளியிடப்பட்டபோதிலும், மேலதிக தகவல்கள் வெளியிடப்படவில்லை. எனினும் ஹேம் பிரியர்களை வெகுவாகக் கவரக்கூடிய வகையில் காணப்படும் இக் ஹேம் தொடர்பான மேலதிக தகவல்கள் எதிர்வரும் வாரங்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## உப்பு நீரில் எரியும் விளக்கு கண்டுபிடிப்பு



உப்பு நீரைப்பயன்படுத்தி விளக்குகளை எரியச்செய்து புரட்சிகர கண்டுபிடிப்பொன்றை பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர் அயிசா மிஜினோ நிகழ்த்தியிருக்கின்றார். சூழலுக்கு பாதிப்பற்ற இந்த கண்டுபிடிப்பானது கடற்கரை பகுதிகளில் வாழும் மக்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தேநீர் கோப்பையில் 2 கரண்டி உப்பைச் சேர்த்து அதனுடன் சில இரசாயனங்களை உள்ளிட்டு அதிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதில் இருந்து பெறப்படும் மின்சார வெளிச்சம் 8 மணி நேரத்திற்கு போதுமானதாகவும் மண்ணெண்ணெய், மின் விளக்குகளைவிட சிக்கனமானதாகவும் உள்ளது. இந்த உப்பு விளக்கிற்கு சர்வதேச அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

## கண்புரை நோய் எப்போது ஏற்படுகிறது? காரணங்கள் என்ன?




கண் புரை நோய் எனப்படுவது, கண்களில் உள்ள திரை அல்லது லென்ஸ், ஒளி அனுப்பும் தன்மையை இழப்பதால் கண்பார்வை குறைவதேயாகும். இந்த நோய் பெரும்பாலும் முதுமையின் துவக்கத்தில் இருந்து ஏற்படலாம். கண் புரை நோய் முதுமையில் ஏற்படும் என்றாலும், மேலும் சில கண் புரை தொடர்பான நோய்கள் இருப்பதாக மருத்துவம் கூறுகிறது. அதில், இரண்டாம் நிலை கண் புரை நோய் என்பது, நமது உடலில் ஏற்படும் வேறுபல நோய்கள் காரணமாக கண்கள் பாதிக்கப்பட்டு கண் புரைநோய்ஏற்படலாம். அடுத்த வகை, சில குழந்தைகள்பிறக்கும்போதே அவர்களின் லென்ஸ்பாதிக்கப்பட்டு அதனால்பார்வை குறைபாடுடன் பிறக்கலாம். ஆனால் இந்த வகை கண் புரையை, அந்த லென்ஸ் நீக்குவதன் மூலம் குணப்படுத்த முடியும். 4வது வகை, கதிர்வீச்சு காரணமாக கண்கள் பாதிக்கப்பட்டு, அதனால் கண் புரை நோய் ஏற்படலாம். மேலும், நீரிழிவு நோய் காரணமாகவும், மது மற்றும் புகைப்பிடித்தல் காரணமாகவும், சுற்றுச்சூழல் காரணமாக அதிகரிக்கும் வெட்பத்தினாலும் கண் புரை நோய் ஏற்படலாம்.

கண்பார்வை மங்குதல், வண்ணங்கள் மங்கலாக தெரிதல், இரவு கண்பார்வை இழத்தல், அதிக ஒளிவட்டத்தால் கண்கள் கூசுதல், தெளிவற்ற பார்வை அல்லது பிம்பங்கள் பல எண்ணிக்கையில் தெரிதல். கண் புரை நோயின் துவக்க நிலை என்றால் மருத்துவரின் ஆலோசனையின் அடிப்படையில் கண்ணாடி அணிந்தாலே போதுமானது.நாள்பட்டதுஎனில்அறுவை சிகிச்சை செய்வதே நல்லது. இதனால் பாதிக்கப்பட்ட லென்ஸ் அகற்றப்பட்டு கண்பார்வையை மீட்டெடுக்கலாம். இப்போது பல நவீன கண் புரை அறுவை சிகிச்சை முறைகள் மருத்துவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் போகோயெமல்சிபிகேஷன் (Phacoemulsification or phaco) எனும் முறை மூலம், முழுமையாக கண் புரையை நீக்கி விடலாம். இந்த முறையில், தையல் போடுவதில்லை. மேலும் வெறும் ஐந்து நிமிடங்களில் அறுவை சிகிச்சை நிறைவு பெறும். இதுபோன்று, தையல் இல்லாத முறைகளும் கையாளப்படுகின்றன. இதை, "மைக்ரோ இன்சிஷன் காட்டராக்ட் சிகிச்சை (MICS) என அழைக்கின்றனர். அறுவை சிகிச்சைக்கு பின்னர் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் காலம் வரையில் சொட்டு மருந்துகள் பயன்படுத்தவேண்டும்.


## இனி விமானங்களை தவற விடவேண்டிய அவசியமே இல்லை



அனைத்து துறைகளையும் ஆக்கிரமித்து வரும் கணனிகள் போன்றே ரோபோக்களும் அனைத்து துறைகளையும் ஆக்கிரமித்துவருகின்றன. இதற்கிணங்க விமான நிலையங்களில் பயணிகளுக்கு உதவிகள் வழங்குவதன் மூலம் விமானங்களைத் தவற விடுவதை தவிர்ப்பதற்கு ரோபோக்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இந்த ரோபோவிற்கு Spencer எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன், பல மொழிகளை விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதன் வடிவமைப்பில் ஐந்து ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும், வியாபார நிறுவனங்களும் பங்குவகிக்கின்றன. இதனை பரீட்சார்த்தமாக முதன் முதலாக ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இந்த ரோபோ பரிசோதனை இங்கிலாந்தின் ஆம்ஸ்டர்டாம் விமான நிலையத்தில் கடந்த ஒரு வாரமாக நடத்தப்பட்டது. வருகிற மார்ச் மாதம் இறுதி பரிசோதனை நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமேஷான் வழங்கும் அதிரடிச் சலுகை




உலகப் புகழ்பெற்ற அமேஷான் நிறுவனமானது அமேஷான் கிளவுட் ட்ரைவ் எனும் ஒன்லைன் சேமிப்பு வசதியினை வழங்குவது அறிந்ததே. இச்சேவையின் ஊடாக தற்போது வெறும் 5 டொலர்களில் வரையறையற்ற சேமிப்பு வசதியினை ஒரு வருடத்திற்கு வழங்குவதற்கு அந் நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கு முன்னர் சாதாரண சந்தா தொகையாக வருடாந்தம் 60 டொலர்கள் செலுத்தவேண்டியிருந்த நிலையிலேயே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது பயனர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருப்பதுடன், இச்சேவையின் ஊடாக புகைப்படங்கள், வீடியோக்கள், கோப்பு வகைகள் என்பன உட்பட பல தரவுகளை ஒன்லைனில் சேமிக்கக்கூடியதாக இருக்கும்.


## 2040 ஆம் ஆண்டில் டேட்டிங் இருக்காது - ஆய்வு



தொழில்நுட்பத்தின் உச்சபட்ச முன்னேற்றத்தால் 2040ஆம் ஆண்டு எழுபது சதவிகிதம் பேர் தனக்கு பிடித்த நபரை சந்திக்க விர்ச்சுவல்(Virtual) தொழில்நுட்பத்தைத்தான் நாடுவார்கள் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. லண்டனின் இம்ப்பீரியல் வர்த்தகக் கல்லூரி நடத்திய ஆய்வில், துணையைத் தேட உதவும் இந்தத் தொழில்நுட்ப முன்னேற்றம் நமக்கான துணையைத் தேட எளிதில் உதவும் எனவும் தெரியவந்துள்ளது. அதாவது, நமது மரபணு மூலக்கூறு அமைப்பை வைத்து அதற்கேற்ற துணையைத் தேடிக்கொள்ளலாம்.

இந்த விர்ச்சுவல் தொழில்நுட்பம், நமது ஐம்புலன்களையும் பயன்படுத்த உதவும். ஆகவே, பூமியின் இருவேறு மூலையில் இருப்பவர்களும் இதன் மூலமாகக் கைகோர்த்துக்கொள்ளலாம். இந்த ஆராய்ச்சி, நூறு ஆண்டுகளுக்கும் முந்தைய மனிதர்களின் நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், நேர்காணல்கள் ஆகியவற்றைக்கொண்டு முடிவுக்கு வரப்பட்டுள்ளது. மேலும், மானுடவியல் என்னும் ஆந்தரபாலஜி, சமூகவியல், தொழில்நுட்பம், உயிரியல் மற்றும் மருத்துவம் போன்றவற்றில் வல்லுனர்களின் கருத்தைக்கொண்டு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. அப்படியென்றால், டேட்டிங் என்பது 2040 ஆம் ஆண்டில் ஒரு வரலாறாகத் தான் இருக்குமே தவிர நிஜத்தில் இருக்காது.

## அன்ரோயிட் இயங்குதளத்துடன் அறிமுகமாகும் Nokia C1



கைப்பேசி சந்தையில் தனக்கென ஒரு இடத்தை கொண்டிருக்கும் Nokia நிறுவனத்தை மைக்ரோசொப்ட் நிறுவனம் கடந்த வருடம் வாங்கியிருந்தது. இவ்வாறான நிலையில் மைக்ரோசொப்ட் நிறுவனம் சில மாதங்களின் பின் தனது பெயரிலேயே கைப்பேசிகளை அறிமுகம் செய்து வந்தது. ஆனால் அடுத்த வருடம் Nokia நிறுவனம் மீண்டும் Nokia C1 எனும் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது.

இக் கைப்பேசியானது அன்ரோயிட் இயங்குதளத்தினைக் கொண்ட முதலாவது Nokia கைப்பேசியாக திகழவுள்ளது. தற்போது இதன் புகைப்படங்கள் உட்பட சில தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்படி 5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் பிரதான நினைவகமாக 2GB RAM இனையும் உள்ளடக்கியுள்ளது.

குழந்தைகளுக்கு ஏற்படும் பதட்டத்தை குறைக்க நாய்கள் தான் மருந்து என்று ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. சிறுவயது குழந்தைகளுக்கு பெரியவர்களிடம் பேசவும், பழகவும் தயக்கமோ அல்லது பயமோ ஏற்படும். நாய் வளர்க்கும் குழந்தைகளில் பன்னிரண்டு சதவிகிதம் பேரும், நாய் இல்லாத குழந்தைகளில் இருபத்தொரு சதவிகிதம் பேரும் பதட்டப்படுவது தெரியவந்துள்ளது. குறும்பு செய்யும் நாயுடன் வளரும் குழந்தைகள் அதனுடன் விளையாடுவதாலும், பேசுவதாலும் மன அழுத்தத்துக்கு ஆளாவதில்லை என்றும் பிறருடன் பேசுவதில் [illegible] ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

சம காலத்தில் மொபைல் சாதனங்கள் உட்பட பல்வேறு சாதனங்களிலும் இலித்தியம் அயன் மின்கலங்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சோடியம் அயனைக் கொண்ட மின்கலத்தினை பிரான்ஸிலுள்ள விஞ்ஞானிகள் குழு ஒன்று முதன் முறையாக உருவாக்கியுள்ளது. இதனை லெப்டொப்களிலும், டுநுனு குடயளா மின்கலங்களை ஒளிர வைப்பதற்கும், வுநளடய ஆழனநட ளு கார்களிலும் பயன்படுத்தக்கூடிய மின்கல மாதிரியினை ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்து பாவனை செய்யக்கூடியதாகவும், இவ்வாறு சார்ஜ் செய்யும்போது ஒரு எலக்ட்ரோட்டிலுள்ள அயன்கள் மற்றைய எலக்ட்ரோட்டிற்கு திரவம் ஒன்றின் ஊடாக பயணம் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உலகம்

## சுனில் நரைனுக்கு சர்வதேச போட்டிகளில் பந்துவீச ஐசிசி தடை



சர்வதேசப் போட்டிகளில் பந்துவீச மேற்கிந்திய தீவுகள் அணியின் நட்சத்திர சுழற்பந்து வீரர் சுனில் நரைனுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கிந்திய தீவுகள் அணியின் "சுழல் மாயாவி" சுனில் நரைன் ஒருஓவரில்6பந்துகளையும்வித்தியாசமாக வீசும் வல்லமை படைத்தவர். ஒருநாள் மற்றும் டி20 போட்டிகள் தரவரிசையிலும் முதலிடத்தில் உள்ளார். இந்நிலையில் அண்மையில் இலங்கைக்கு எதிராக பல்லேகலேயில் நடந்த ஒருநாள் போட்டியில் பங்கேற்ற நரைன் விதிமுறைக்கு மாறாக பந்துவீசுவதாக புகார் எழுந்தது. அதாவது, அனுமதித்த அளவான 15 டிகிரியை தாண்டி முழங்கையை வளைப்பதாக குற்றம் சாட்டப்பட்டது.

இதைத்தொடர்ந்து கடந்த 17ம் திகதி இங்கிலாந்தில் உள்ள லாபாரோ பல்கலைக்கழகத்தில் இவருக்குபந்துவீச்சு பரிசோதனை செய்யப்பட்டது. இதில் அவர் விதிமுறையை மீறி பந்துவீசி வருவது தெரியவந்தது. இதன் அடிப்படையில் அவர் தொடர்ந்து பந்துவீச சர்வதேச கிரிக்கெட் வாரியம் தடை விதித்தது. சர்வதேச கிரிக்கெட் வாரியத்தின் விதிமுறைப்படி அனைத்து நாடுகளில் நடைபெறும் கிரிக்கெட் போட்டிகளிலும் சுனில் நரைன் பந்துவீச தடைவிதிக்கப்படுகிறது. இதனால் ஐபிஎல் தொடரில் கொல்கத்தா அணியில் விளையாடி வரும் நரைன், பிரிமியர் போட்டிகளில் பங்கேற்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக பெண் நடுவர்கள்



கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக பெண் நடுவர்களை நியமித்து ஆச்சரியப்படுத்தியுள்ளது சர்வதேச கிரிக்கெட் வாரியம். 1934ம் ஆண்டு முதலே அதிகாரப்பூர்வமாக மகளிர் கிரிக்கெட் தொடங்கினாலும், அந்தப் போட்டிகளில் நடுவர்களாய் ஆண்களே இருந்து வந்துள்ளனர். இந்த நிலையில் கிரிக்கெட்டில் பெண்களின் பங்கீட்டையும், அவர்களிடையே இதன் மீதான ஆர்வத்தையும் அதிகரிப்பதற்காக சர்வதேச கிரிக்கெட் வாரியம் வித்தியாசமான முடிவை எடுத்துள்ளது.

அதாவது, உள்ளூர் போட்டிகளில் மட்டுமே பெண் நடுவர்கள் செயற்பட்டு வந்த நிலையில், முதன்முறையாக 4 பெண் நடுவர்கள் சர்வதேச போட்டிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். கேத்தி கிராஸ் (நியூசிலாந்து), க்ளேர் பொலோசக் (அவுஸ்திரேலியா), சுயூ ரெட்ஃபெர்ன் (இங்கிலாந்து) மற்றும் ஜாக்குலின் வில்லியம்ஸ் (ஜமைக்கா) ஆகிய 4 பேர் தான் ஐ.சி.சி.யின் அதிகாரப்பூர்வ நடுவர் குழுவில் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் தாய்லாந்தில் நடக்கும் மகளிர் டி20 உலகக்கிண்ண தகுதிச் சுற்றுப் போட்டிகளுக்கு நடுவர்களாக செயற்படவுள்ளனர். இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் 5ம் திகதி வரை நடைபெறுகிறது.

## 16 வயது கோல் கீப்பரின் மதிப்பு 170 மில்லியன் யூரோ



இத்தாலியின் 21 வயதுக்குட்பட்டோர் உதைப்பந்தாட்ட அணியின் கோல் கீப்பரான கியான்லூகி டொன்னருமாவின் மதிப்பு 170 மில்லியன் யூரோ என்று அவரது ஏஜெண்ட் தெரிவித்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தாலியின் 21வயதுக்குட்பட்டோருக்கான உதைப்பந்தாட்ட அணியின் கோல் கீப்பரான இருப்பவர் கியான் லூகி டொன்னருமா. 16 வயதான இவர் புகழ்பெற்ற ஏ.சி.மிலன் அணியின் கோல் கீப்பராகவும் விளையாடி வருகிறார். இதுவரை சீரி-ஏவில் 6 ஆட்டங்களில் விளையாடியுள்ள டொன்னருமாவின் சிறப்பான செயற்பாடுகள் அனைவரையும் கவர்ந்துள்ளது.

இதன் காரணமாக அவருக்கு இளம் ரசிகர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனவே, தற்போது டொன்னருமாவை வாங்க மான்செஸ்டர் யுனைடட், செல்சி உள்ளிட்ட பல்வேறு அணிகளும் போட்டி போடுகின்றன. இந்நிலையில் டொன்னருமாவின் ஏஜெண்டான மினா ரியோலா, டொன்னருமாவை வாங்கும் அணி அவருக்கு விலையாக 170 மில்லியன் யூரோக்கள் தரவேண்டும் என்று கூறி அதிர்ச்சியளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், டொன்னருமாவுக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது. அவர் தற்போதே சாம்பியன் தான். எனினும் எதிர்காலத்தில் அவர் சிறந்த வீரராக திகழ்வார் என்று தெரிவித்துள்ளார்.

## மக்காவ் ஓபன் பேட்மின்டனில் சிந்து "ஹாட்ரிக்" சாதனை



மக்காவ் ஓபன் பேட்மிண்டன் தொடரில் இந்தியாவின் பி.வி.சிந்து சாம்பியன் பட்டம் வென்று அசத்தியுள்ளார். மக்காவ் ஓபன் பேட்மிண்டன் போட்டி சீனாவில் நடைபெற்று வருகிறது. இதில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மினட்சு மிட்டானியை எதிர்கொண்டார். ஒரு மணி 6 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப்போட்டியில் பி.வி. சிந்து, மினட்சு மிட்டானியை 21-9, 21-23, 21-14 என்ற செட் கணக்கில் போராடி வீழ்த்தினார். இதன் மூலம் பி.வி.சிந்து மூன்றாவது முறையாக மக்காவ் ஓபன் பட்டத்தை வென்றுள்ளார். ஏற்[...]வே இரண்டு முறை அடுத்தடுத்து பட்டம் வென்றிருந்தார்.

வெற்றி குறித்து சிந்து கூறுகையில், "மக்காவ் ஓபனில் சாம்பியன் பட்டம் வென்றது மகிழ்ச்சியளிக்கிறது. ஜப்பான் ஓபனில் மிட்டானியிடம் தோற்றேன். தற்போது அவரை வென்றது உற்சாகம் அளிக்கிறது" என்று கூறியுள்ளார். சாம்பியன் பட்டம் வென்ற பி.வி. சிந்துவுக்கு 1 லட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்பட்டது.

## இங்கிலாந்து இளவரசர் ஹரிக்கு காத்திருந்த அதிர்ச்சி



தென் ஆபிரிக்க நாட்டில் நடைபெற்ற 'போலோ' விளையாட்டில் பங்கேற்ற இங்கிலாந்து இளவரசரான ஹரி, எதிர்பாராத விதமாக குதிரையில் இருந்து கீழே விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து இளவரசரான ஹரி, ஏழை மற்றும் எளிய மக்களுக்கு உதவும் வகையில் லெசோதோ நாட்டில் Sentebale என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்தத்தொண்டு நிறுவனத்திற்கு நிதி திரட்டும் வகையில், தென் ஆபிரிக்காவில் அண்மையில் 'போலோ' விளையாட்டு ஒன்று நடைபெற்றுள்ளது. இந்த விளையாட்டில் ஒரு அணியின் வீரராக இளவரசர் ஹரியும் பங்கேற்றுள்ளார். இந்நிலையில், இரு அணியினரும் மோதிக்கொண்டிருந்த நேரத்தில், இளவரசர் ஹரி அமர்ந்திருந்த குதிரை வேகமாக சென்றபோது நிலைகுலைந்த ஹரி திடீரென குதிரை மீதிருந்து விழுந்துள்ளார்.

ஆனால், அதிர்ஷ்டவசமாக கண் இமைக்கும் நேரத்தில் கைகளை தரையில் ஊன்றியதில் அவருக்கு எந்த காயமும் ஏற்படவில்லை. இளவரசர் ஹரி கீழே விழுந்ததால், விளையாட்டு சிறிது நேரம் ஒத்தி வைக்கப்பட்டு ஹரிக்கு முதலுதவி சிகிச்சைகள் அளிக்கப்பட்டது. சிறிது நேரத்திற்கு பின்னர் மீண்டும் தொடங்கிய இந்த விளையாட்டில், துரதிஷ்டவசமாக இளவரசர் ஹரியின் அணியினர் தோல்வியை சந்தித்தனர். கடந்த 2010ம் ஆண்டில் இங்கிலாந்து, அமெரிக்கா, பிரேசில், பர்பாடோஸ் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளில் நடைபெற்ற போலோ விளையாட்டுகள் மூலம் சுமார் 3 மில்லியன் பவுண்ட் நிதி திரட்டி தன்னுடைய தொண்டு நிறுவனத்திற்கு உதவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இளம் அணித்தலைவராக ஜொலிக்கும் மேத்யூஸ்



மேத்யூஸ் 3 வகையான கிரிக்கெட் போட்டிகளையும் வழிநடத்த தகுதியானவர் என்று இலங்கை அணியின் முன்னாள் தலைவரான அரவிந்த டி சில்வா கூறியுள்ளார். தனது அறக்கட்டளை மூலம் இளம் வீரர்களை தேடும் பணியில் தீவிரமாக களமிறங்கி இருக்கிறார் டி சில்வா. தற்போது துபாயிலும் கிரிக்கெட் அகடமியை ஆரம்பித்திருக்கிறார். அரவிந்த டி சில்வா கூறுகையில், "இளம் வயது வீரர்களுக்கு நான் உதவ எப்போதும் தயாராக இருக்கிறேன். அவர்களுக்கு உதவி தேவைப்படும்போது கண்டிப்பாக நான் அங்கு இருப்பேன். தனது அறக்கட்டளை மூலமாக இளம் வீரர்களை தேடும் பணி கடந்த 7 வருடமாக சிறப்பாக நடைபெற்று வருகிறது. 500 பள்ளிக்கூட[...]ளை தாண்டி இந்த பணி சென்று கொண்டிருக்கிறது" என்று கூறியுள்ளார்.

மேலும், தற்போதைய ஒருநாள் மற்றும் டெஸ்ட் தலைவராக உள்ள மேத்யூஸ் பற்றி அவர் கூறுகையில், "மலிங்காவின் ஓய்வுக்கு பிறகு டி20 தலைவராகவும் மேத்யூஸ் செயற்பட வாய்ப்பிருப்பதாக கருதுகிறேன். அவர் சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். கடந்த சில வருடங்களாக இளம் வீரராக அனைத்தையும் அற்புதமாக செயற்படுத்துகிறார். இலங்கை அணியின் சிறந்த தலைவராக செயற்பட்டு வரும் மேத்யூஸ்க்கு பாராட்டு தெரிவித்து கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## காதலியை கொலைசெய்த பிஸ்டோரியஸ்க்கு 15 ஆண்டு சிறை



தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஓட்டப் பந்தய வீரரான ஒஸ்கர் பிஸ்டோரியஸ் தனது காதலியை திட்டமிட்டு சுட்டுக்கொன்றதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதனையடுத்து அவருக்கு 15 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் எனத்தெரிகிறது. 29 வயதான பிஸ்டோரியஸ், கடந்த 2013ல் தனது காதலி ரீவா ஸ்டீன்கேம்ப்பை சுட்டுக்கொன்றார். இதையடுத்து கைது செய்யப்பட்ட பிஸ்டோரியஸ், எனது வீட்டுக்குள் திருடர்கள் நுழைகிறார்கள் என நினைத்து சுட்டுவிட்டேன் என விசாரணையின்போது [...] தெரிவித்தார்.

இதன்பிறகு அவருக்கு குறைந்தபட்ச தண்டனையாக 5 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதில் ஓர் ஆண்டை கழித்துவிட்ட பிஸ்டோரியஸ், இப்போது உடல் நலக்குறைவு காரணமாக வீட்டுக் காவலில் உள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட [...]தண்டனையை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த நீதிமன்றம், பிஸ்டோரியஸ் திட்டமிட்டே கொலை செய்துள்ளார் என தீர்ப்பு வழங்கியுள்ளது. தென் ஆபிரிக்க சட்ட விதிகளின்படி திட்டமிட்டு கிரிமினல் நோக்கத்தோடு செய்யப்படும் கொலைகளுக்கு குறைந்தபட்சமாக 15 ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்படுவது வழக்கம். அதனால் பிஸ்டோரியஸ் 15 ஆண்டு சிறைத் தண்டனை பெற வாய்ப்புள்ளது.

## இறுதிப் பட்டியலில் ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர்



இந்த ஆண்டுக்கான பலோன் டி ஆர் (தங்கப்பந்து) விருதுக்கான இறுதிப்பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில்பார்சிலோனாவின்மெஸ்ஸி,நெய்மர் மற்றும் ரியல் மாட்ரிட்டின் ரொனால்டோ ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஜனவரி 11ம் திகதி இந்த விருதுக்கான வீரர் அறிவிக்கப்படுவார். இந்த 3பேர் பட்டியலில் இருந்து விருதுக்குரிய வீரரை கால்பந்து பத்திரிகையாளர்கள், தேசிய அணியின் பயிற்சியாளர்கள் வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச் செய்திகள்

## ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் துருக்கி உறவு - ரஷ்யா



ஐ.எஸ் தீவிரவாதிகளிடமிருந்து துருக்கி எண்ணெய் கொள்வனவு செய்து வருவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றம் சாட்டியுள்ளார். காலநிலை மாற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் சென்றிருந்த ரஷ்ய ஜனாதிபதி இந்த தகவலை வெளியிட்டார். ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்துவரும் துருக்கி, தங்களது எல்லைக்குள் எண்ணெய் கொண்டு வரப்படும் வழித்தடங்களைப் பாதுகாக்கவே ரஷ்ய விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

சிரியாவில் அதிபர் அல்-அஸாத்துக்கு ஆதரவாக ஐ.எஸ் பயங்கரவாத நிலைகள் மீதும், பிற கிளர்ச்சி அமைப்புகள் மீதும் ரஷ்யா வான்வழித் தாக்குதல்களை நிகழ்த்தி வருகிறது. இந்த நிலையில், தங்கள் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்ததாகக்கூறி, ரஷ்யாவின் போர் விமானத்தை துருக்கி கடந்த மாதம் 24ஆம் திகதி சுட்டு வீழ்த்தியது. அந்த விமானத்திலிருந்து பராசூட் மூலம் குதித்த விமானிகளில் ஒருவர் துருக்கி ஆதரவு கிளர்ச்சியாளர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். மற்றொருவர் ரஷ்யப் படையினரால் மீட்கப்பட்டார். அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்ட ஹெலிகொப்டர்களில் ஒன்று கிளர்ச்சியாளர்களின் தாக்குதலில் சேதமடைந்தது. அதிலிருந்த ரஷ்ய வீரர் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து ரஷ்யா - துருக்கி இடையே போர்ப் பதற்றம் அதிகரித்தது. எனினும், இந்தச் சம்பவத்துக்காக போரைத்தொடங்க மாட்டோம் என இரு நாடுகளும் திட்டவட்டமாகத் தெரிவித்தன. இருந்தாலும், போர் விமானம் வீழ்த்தப் பட்டதற்குப்பதிலாக, துருக்கி மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உத்தரவிட்டார்.

## முழு செல்வத்தையும் வழங்கும் பேஸ்புக் ஸ்தாபகர்



முன்னணி சமூக வலைத்தளமான பேஸ்புக்கின் ஸ்தாபகர் பெண் குழந்தைக்கு தந்தை ஆனதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். மார்க் ஸுகர்பெர்க் - பிரிஸ்சில்லா சான் தம்பதிகளுக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது. அக்குழந்தைக்கு மக்ஸிமா என பெயர் சூட்டியுள்ளனர். இத் தகவலை ஸுகர் பேர்கும் அவரது மனைவி பிரிசில்லாவும் பேஸ்புக்கில் அறிவித்துள்ளனர். மேலும் தங்களது குழந்தையின் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளனர்.

பேஸ்புக்கில் இருவரும் இணைந்து ஒரு கடிதம் எழுதியுள்ளனர். அதில் தங்களது வாழ்நாளில் மூன்று லட்சம் கோடி ரூபா மதிப்பிலான 99 சதவீத கம்பெனிகள் பங்குகளை உலக மக்களின் மகிழ்ச்சிக்கு, சுகாதாரமான வாழ்க்கைக்கு வழங்க இருப்பதாக அறிவித்துள்ளனர். ஸுகர்பெர்க் தனது மகளுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் மகள் மக்ஸிமா மற்றும் பிற குழந்தைகளுக்காக சிறந்த உலகை உருவாக்க தனது செல்வம் முழுவதையும் தருவதாக உறுதி அளித்துள்ளார்.

## சிரியா விவகாரம் – பிரித்தானிய பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு




ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான சிரிய நடவடிக்கைகளில் பங்கு கொள்வது தொடர்பாக பிரித்தானிய பாராளுமன்றத்தில் விசேட வாக்கெடுப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது. ஐ.எஸ் தீவிரவாதிகள் இப்போது பிரித்தானியாவிற்கு அச்சுறுத்தலாகக் காணப்படுவதாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரோன் கடந்த தினத்தில் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிரான சிரிய நடவடிக்கைகளில் பங்கு கொள்வது தொடர்பில் முடிவொன்றை எடுக்கத் தயாராகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலிபான் தலைவர் முல்லா அக்தர் மன்சூர் மரணம்



ஆப்கான் தலிபானின் தலைவர் முல்லா அக்தர் மன்சூர் உயிரிழந்துள்ளதாக பாக்கிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் நான்கு தலிபான்களுக்கு இடையில் ஏற்பட்ட துப்பாக்கி சண்டையின்போது முல்லா உயிரிழந்துள்ளதாக பாக்கிஸ்தான் இராணுவ தகவல்கள் தெரிவிக்கின்றன. முல்லாவின் இறப்பின் பின்னர் பல விவாதங்களும் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் அவர் இன்னும் இறக்கவில்லை என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

தலிபான் பிளவுகளை தூண்டுவதற்காக முல்லா மன்சூர் நியமிக்கப்பட்டார். அதன் பிறகு ஜூலை காலப்பகுதியில் அவரும் உயிரிழந்ததாக முல்லா ஓமர் தெரிவித்தார். மூத்த தலிபான் தளபதிகள் பலர் முல்லா முகம்மது ரசூலுடன் ஒன்றிணைந்து கடந்த மாதம் நாட்டிற்குள் பிளவை ஏற்படுத்தும் வகையில் அமைப்பொன்றை உருவாக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## கலிபோர்னியா தாக்குதல் - சூத்திரதாரிகள் இருவர் சுட்டு கொலை



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள சென் பேர்னாடினோ பகுதியில் துப்பாக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டு 14 பேர் பலியாகியதுடன் மேலும் 17 பேர் காயமடைந்துள்ளனர். இந்த தாக்குதல் நடத்திய 3 துப்பாக்கிதாரிகள் தேடப்பட்டு வந்த நிலையில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் குற்றவாளிகளின் காரை பின் தொடர்ந்தனர். அப்போது அவர்கள் பொலிஸார் நோக்கிதுப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு பொலிஸாரும் சுட்டனர். சில மணிநேரம் நடந்த துப்பாக்கிச்சூட்டில் பொலிஸார் எஸ்யுவி காரில் இருந்த இரண்டு பேரையும் சுட்டுக்கொன்றனர்.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனவும் முஸ்லிம் இனத்தவர்கள் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இந்த சம்பவம் தீவிரவாதத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன் மற்றுமொருவர் பொலிஸாரினால் தேடப்பட்டு வருகிறார்.

## தீவிரவாதிகளைக்கொன்று 900 பிணைக் கைதிகள் விடுதலை

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் அதிபராக முகமது புகாரி கடந்த மே மாதம் முதல் பதவி வகித்து வருகிறார். இதற்கு முன்பாக குட்லக் ஜோனாதன் என்பவர் பதவி வகித்து வந்தார். நைஜீரியாவில் அரசுக்கு எதிராக போகோஹராம் தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். வெடிகுண்டு வீச்சு, துப்பாக்கி சூடு, போன்ற வன்முறை சம்பவங்கள் மூலம் தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்களை கொன்று குவிக்கின்றனர். பள்ளி மாணவிகள் மற்றும் இளைஞர்களை கடத்தி விற்பனை செய்கின்றனர். இவர்களின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால் போகோஹராம் தீவிரவாதிகளை கட்டுப்படுத்த அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளை நைஜீரியா உதவிக்கு அழைத்தது. அதன்படி பல்வேறு நாடுகள் போகோஹராம் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் கடந்த வாரம் இங்கிலாந்து ராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கையில் 100 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும், 900 பிணைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டதாகவும் அந்நாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து ராணுவத்தினால் இந்த அழிப்பு நடவடிக்கை கடந்தவாரம் நவம்பர் 26 முதல் 28 வரை நைஜீரிய எல்லைப்பகுதியில் நடத்தப்பட்டது. இதில் நூற்றுக்கும் அதிகமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று இங்கிலாந்து நாட்டின் பாதுகாப்புத்துறை மந்திரி ஜோசப் அச்சோமோ தெரிவித்துள்ளார். மேலும் அவர்களிடம் இருந்து 900 பிணைக்கைதிகள் மீட்கப்பட்டதோடு, ஐ.எஸ் தீவிரவாதிகளின் கொடிகளும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் கூறினார்.


## விமானத்தை மீண்டும் தேடும் அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள்



வான்பரப்பில் காணாமல்போன எம்.எச். 370 பயணிகள் விமானம் மலேசிய கடற்பகுதியில் வீழ்ந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இதனையடுத்து அந்தப்பகுதியில் அவுஸ்திரேலிய ஆராய்ச்சியாளர்கள் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்புத் துறையினரால் முன் வைக்கப்பட்ட ஆய்வு தரவின்படி, இந்தியாவிலிருந்து அநேகமாக தெற்கு பகுதியில் காணப்படலாம் எனவும் பெருங்கடல் பகுதியில் அவர்களது தேடல் இருக்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய தேடுதல் நடவடிக்கையானது அடுத்த வருடம் ஜூன் மாதம் வரை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.. எம்.எச்.370 விமானம் 2014ஆம் ஆண்டு 239 பயணிகளுடன் கோலாலம்பூரிலிருந்து புறப்பட்டுச் சென்றவேளை, வான் பரப்பில் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய ஜனாதிபதிக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புட்டினுக்கு ஐ.எஸ் தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி புட்டினுக்கும் ரஷ்யாவிற்கும் பாரிய அனர்த்தம் ஒன்று காத்திருப்பதாக அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். சிரியாவில் உள்ள ரஷ்ய உளவாளி ஒருவரின் கழுத்தை அறுத்து கொலைசெய்யும் காணொளி ஒன்றை ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

இதன் மூலம் ரஷ்யாவிற்கு எதிரான யுத்தம் ஆரம்பமாவதாக அந்த காணொளியில் தீவிரவாதிகள் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோ அதுபோல் அமெரிக்காவின் வோசிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்களிலும் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று ஐ.எஸ் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்

## பிரான்ஸில் மூடப்படும் பள்ளிவாசல்கள்

பிரான்ஸிலுள்ள சுமார் 160 பள்ளிவாசல்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அண்மையில் பாரிஸில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படைவாத, தீவிரவாத மற்றும் வெறுப்பையும் பரப்பும் பள்ளிவாசல்களும் அனுமதி இன்றி செயற்படும் பள்ளிவாசல்களுமே இவ்வாறு மூடப்பட்டுள்ளன. பிரான்ஸிலுள்ள பள்ளிவாசல்களுக்கான இமாம்களை நியமிக்கும் பொறுப்பு வகிக்கும் ஹஸன் எல் அலோவுய், இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் பிரான்ஸ் உள் விவகார அமைச்சுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகவும், உத்தியோகபூர்வத் தகவல்களின் அடிப்படையில், 100 தொடக்கம் 160 வரையிலான பள்ளிவாசல்களை மூடுவதற்குத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். ஏனைய மதங்கள் மீது வெறுப்பாளர்கள் எனக் குற்றஞ்சாட்டும் நடவடிக்கை பிரான்ஸில் அதிகரித்துள்ளதோடு, பிரிவினைக்கும் பாகுபாட்டுக்குமாகப் பயன்படுத்தப்படுகிறது. 'இவ்வாறான பேச்சுகள், இஸ்லாமிய நாடுகளில் கூட அனுமதிக்கப்படக்கூடாது. பிரான்ஸ் போன்ற மதச்சார்பற்ற நாடுகளைப் பற்றித் தெரிவிக்கவே தேவையில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். இந்த நடவடிக்கைகளின் மூலம் 03 பள்ளிவாசல்களை ஏற்கெனவே மூடியுள்ளதாகவும், அவை மூடப்படும்போது, றிவோல்வர்கள், ஜிஹாதி ஆவணங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு விளம்பரங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.12.2015 அன்று வெளியிடப்பட்டது.